# திருக்கல்யாணத் தாய்

www. thirukalyanamatha.com தொலைபேசி : 04639 - 261230
kalyanamatha@gmail.com

ஆசிரியர் & வெளியிடுபவர்
அருட்திரு.முனைவர். R. **ஜோசப் ரவிபாலன்**

**ஆலோசகர் குழு**
அருட்திரு. ஜாண் போஸ்கோ
அருட்திரு. சிலுவை தங்கம்
அருட்திரு. டென்சில் ராஜா
அருட்திரு. ஜோசப் ஸ்டார்லின்
அருட்திரு. ஜோசப் பாக்கியராஜா
அருட்சகோதரி. புளோரா

**ஆசிரியர் குழு**
அருட் சகோதரி. மைக்கிள்
திரு. ஜெயசீலன் அந்தோணிராஜ்
திரு. அந்தோணி ஜெயராஜ்
திரு. பெலிக்ஸ் அந்தோனி
திரு. ஜோசப் ததேயூஸ் ராஜா
திருமதி. ரெவின்யூஸ் ராணி
திரு. மெசியாஸ்

**தொடர்பு முகவரி**
திருத்தல அதிபர்
திருக்கல்யாணத்தாய் திருத்தலம்
பொத்தக்காலன்விளை 628 702
தூத்துக்குடி மாவட்டம், தமிழ்நாடு
தொலைபேசி : 04639 - 261230

**விளம்பரம் செய்ய தொடர்புக்கு...**
திருத்தலக்கடை : 04639 -261330
திருத்தல அலுவலகம் : 04639 -261430

## மலரின் உள்ளே...

| | |
|---|---|
| ஆசிரியரின் அருளுரை | 1 |
| கல்யாணத்தாயின் வழி.... | 5 |
| அற்புதங்கள் சாட்சிகள் | 9 |
| மனதைப் பயன்படுத்துங்கள் | 10 |
| பனிமயமாதா - வரலாறு | 12 |
| ஞானத்தின் இருப்பிடம் மரியா | 14 |
| இளையோருக்கு வழிகாட்டும் திருவிவிலியம் | 17 |
| கவிதைச் சோலை | 20 |
| திருச்சபை செய்திகள் | 22 |
| எனது கிராமம் | 24 |
| வாழ்வு தரும் வார்த்தை | 31 |
| விவிலிய கேள்வி-பதில் | 32 |

வாங்கிவிட்டீர்களா !
**திருக்கல்யாணத்தாய் மாத இதழ்**
சந்தா செலுத்தி உறுப்பினர்களாகச் சேர்ந்து பயன் பெறுங்கள்
உங்களுக்காக ஜெபிக்கிறோம். ஆண்டு சந்தா ரூ. 100



# ஆசிரியரின் அருளுரை

இயேசுவில் அன்புக்குரியவர்களே!
திருக்கல்யாணத் தாயின் அருமையான பிள்ளைகளே!

செப்டம்பர் மாதத்தில் நம் அன்புத் தாய் மரியாவுக்கு விழாக்கள் கொண்டாடப் படுகின்றன. அவரது பிறப்பு விழா செப்டம்பர் 8 ஆம் தேதி கொண்டாடப்படுகிறது. மரியாவின் சிறப்புப் பற்றி விவிலியத்தில் பல குறிப்புக்கள் இருக்கின்றன. ஆனால் அவரது பிறப்புப் பற்றி எவ்விதக் குறிப்பும் விவிலியத்தில் காணப்படவில்லை என்பதுதான் உண்மை.

திருச்சபைக்கென்று ஒரு சிறந்த பாரம்பரியம் இருப்பதை நாம் அறிவோம். வாய் வழிச் செய்திகளாக பல நூற்றாண்டுகளாக மக்கள் மத்தியில் பகிர்ந்துகொள்ளப்பட்டக் கருத்துக்களும், சில நூல்களின் வாயிலாகப் பகிரப்பட்டுள்ளக் கருத்துக்களும் திருச்சபையின் பாரம்பரியமாக அறியப்படுகின்றன. விவிலியத்தில் அடங்கியுள்ள நூல்கள் இறை ஆவியின் தூண்டுதலில் எழுதப்பட்டவை. ஆனால் வேறு பல நூல்கள் திருச்சபையின் அங்கீகாரம் பெறவில்லை. கி. பி. 2 அல்லது 3 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டிருக்கலாம் என்று கருதப்படும் யாக்கோபுவின் முதல் நற்செய்தி அல்லது யாக்கோபுவின் நூல் என்று தலைப்பிடப்பட்டுள்ள நூலில் மரியாவின் பிறப்பு குறித்து எழுதப்பட்டுள்ளது.

மரியாவின் பெற்றோர் புனித சுவக்கீனும் புனித அன்னாவும் செல்வச் செழிப்புடன் வாழ்ந்ததோடு, ஏழைகளின் மீது பரிவும் இரக்கமும் கொண்டு, அவர்களுக்கு ஏராளமான உதவிகள் புரிந்து வந்தனர். கோவில் பணிகளிலும், நிகழ்வுகளிலும் மிகுந்த ஈடுபாட்டுடன் பங்கேற்றனர். ஆனால் அவர்களுக்கு ஒரேயொரு மனக்குறை. எல்லாச் செல்வங்களையும் பெற்றிருந்த அவர்களுக்குக் குழந்தைச் செல்வம் இல்லை. குழந்தைப் பேறின்றி இறந்தால் வரலாறு தங்களை இகழும் என்பதை அவர்கள் உணர்ந்திருந்தனர். ஒருமுறை அன்னாவுக்கு ஒரு வானதூதர் தோன்றி, அவருக்கு ஒரு பெண் குழந்தை பிறக்கும் என்று கூறினார். அந்தக் கூற்று மெய்யானது. அன்னா, சுவக்கீன் ஆகிய இருவரும் தாங்கள் இறைவனிடமிருந்து பெற்ற மரியா என்கிற அற்புதக் கொடையை நினைத்து அகமகிழ்ந்தனர். தாங்கள் பெற்றெடுத்தக் குழந்தைக்காக இறைவனுக்கு நன்றி கூறியதோடு, அந்தக் குழந்தைக்கு மூன்று வயது ஆன போது, அதை எருசலேம் கோவில் குருக்களிடம் ஒப்படைத்து மகிழ்ந்தனர்.

மேலும் இம்மாதம் 15 ஆம் நாள் வியாகுல அன்னையின் விழா. இறைவனின் திருவுளத்தை நிறைவேற்றிட அன்னை மரியா பலவிதமானத் துன்பங்களுக்கு தன்னை உட்படுத்திக்கொள்ள வேண்டியிருந்தது. அவர் ஏழுவிதமான துயரங்களை அனுபவித்தார்: 1. எருசலேம் கோவிலில் சிமியோன் உரைத்த இறைவாக்கு 2. குழந்தை இயேசுவை தூக்கிக் கொண்டு இரவோடு இரவாக 300 மைல்களுக்கு அப்பால் அமைந்திருந்த எகிப்தை நோக்கிப் பயணம் மேற்கொண்டது 3. பன்னிரண்டு வயது நிரம்பிய இயேசு கோவிலில் காணாமல் போனது 4. இயேசு கல்வாரி நோக்கிச் சிலுவையைச் சுமந்து சென்றபோது, அவரைச் சந்தித்தது 5. இயேசு சிலுவையில் அறையப்பட்ட்து 6. இயேசுவின் இறந்த உடல் சிலுவையிலிருந்து இறக்கப்பட்ட்து 7. இயேசுவின் அடக்கத்தில் கலந்து கொண்டது.

இறைவனின் அற்புதக் கொடையாக சுவக்கீனுக்கும் அன்னாவுக்கும் நம் அன்புத் தாய் மரியா பிறந்தார் என்பது ஒரு சிறப்பு நிகழ்வாக நம்மால் கொண்டாடப்பட்டாலும், தான் அனுபவித்த துன்ப துயரங்களின் வேளையில் இறைவனிடம் சரணடைந்தவராய், அவரது திருவுளத்தை நிறைவேற்றுவதில் மிகவும் சிரத்தையுடன் செயல்பட்டாரே அதுதான் நம் அன்னையின் சாதனை.

**- அருட்திரு முனைவர் R. ஜோசப் ரவி பாலன்**
**திருத்தல அதிபர்**
**திருக்கல்யணமாதா திருத்தலம், பொத்தக்காலன்விளை**

# மரியாயின் சேனைக்கு பிறந்தநாள்

1921ம் ஆண்டு செப்டம்பர் 7ம் நாள் மாலை தொடங்கி 8ம் நாளில் அன்னையின் பிறந்தநாள் நறுமணத்தைத் தாங்கியது சேனை.

அயர்லாந்து நாட்டில் டப்னின் நகரில் உருவானது பாப்பு 11ம் பத்திநாதர் ஆசியுடன் 93 ஆண்டுகள் உலகெங்கும் பரவி பணியாற்றுகிறது. பொற்பை மாநகரில் திருக்கல்யாணத்தாய் பெயர் தாங்கி 38 ஆண்டுகள் செயலாற்றி வருகிறது. அன்னையின் ஆசி பெற்று அயராது உழைக்க வேண்டுகிறோம். அன்னைக்குச் சான்று பகர்ந்து வழி தவறமாட்டோம்.

அவளை மன்றாடினால் மனங்கலங்க மாட்டோம். அன்னையை நினைத்தால் அலைந்துதிரியமாட்டோம். அவள் தாங்கி நின்றால் சறுக்கி விழமாட்டோம். அன்னை பாதுகாத்தால் அச்சம் கொள்ளமாட்டோம் அவள் வழிகாட்டினால் களைப்புறமாட்டோம் அன்னை ஆதரவு பெற்றால் துறை சேர்வோம் ' ஓ மரியே எங்கள் அன்னையே, நாங்கள் சந்திக்கும் ஒவ்வொரு ஆளிலும், உம்திருமகன் உருவைக்காணவும், தூய ஆவியில் மகிழவும் அவரது அருள் ஒளியை ஒளிரச்செய்யும் தேவ அன்னையின் பிறந்த நாளில் ஜெபித்து வாழ்த்தும்.

–**மரியாயின் சேனையார்,** பொற்பை

# Ïẃἐ ÎάἐʹOZòʹIŋ

அருட்திரு. முனைவர் **R.ஜோசப் ரவி பாலன்**

ஒன்றாம் திருப்பாடல் ஓர் அறிவுரைப்பாடல். திருப்பாடல்கள் நூலுக்கு ஒரு முன்னுரையைப் போல இப்பாடல் அமைந்துள்ளது. திருப்பாடல்களில் இந்தத் திருப்பாடல் மட்டும்தான் உரைநடையில் எழுதப்பட்டுள்ளது. உன் வாழ்க்கை என்கிற நாற்றங்காலில் எதை விதைக்கிறாயோ, அதைத்தான் நீ அறுவடை செய்வாய் என்கிற கருத்து இங்கு உயர்ந்து நிற்பதை அறியலாம். ஆண்டவரின் திருச்சட்டம் என்கிற கருத்து இந்தப்பாடலில் மட்டுமல்ல, தி.பா 19:7 மற்றும் தி.பா 119:1 ஆகிய பகுதிகளிலும் வருவதைக் காணலாம். இந்தத் திருப்பாடலை மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம்.

1. ஆண்டவரின் திருச்சட்டத்தில் மகிழ்ச்சியுறும் நற்பேறு பெற்றவர் பற்றிய செய்தி (1-3)


2. நல்லவரைப் பற்றி எடுத்துச் சொல்லும் ஓர் உதாரணம்(வ. 3) மற்றும் தீயவரைப்பற்றி உணர்த்தும் எடுத்துக்காட்டு (வ. 4)

3. பொல்லாரின் முடிவு

மொத்தத்தில் இத்திருப்பாடலில் இரண்டு வழிகள் குறிப்பிடப்பட்டுள்ளன. திருவிவிலியத்தில் இரண்டு வழிகள் பற்றியக் கருத்து இன்னும் பல இடங்களில் சொல்லப்பட்டுள்ளதை நாம் காணலாம். (இச 30:15; எரே 21:8; நீ.மொ.4:18; மத் 7:13) ஒவ்வொரு நபரின் தனிப்பட்டப் பொறுப்பினையும் இது சுட்டிக்காட்டுகிறது. கடவுளுக்குக் கீழ்ப்படிந்து நடந்து கொண்டவர்களாய், அவரது திருவுளத்திற்குப் பணிந்து வாழ்பவர்கள் உண்மையான மகிழ்ச்சியைப் பெற்றுக்கொள்வர் என்பது இப்பாடலின் முக்கிய கருத்து என்று சொன்னால் அது மிகையாகாது. இப்பாடலின் தொடக்கத்தில் நற்பேறு என்கிற வார்த்தைப் பயன்படுத்தப்பட்டுள்ளது. பொதுவாக இவ்வார்த்தை அறிவுரை அல்லது ஞான இலக்கியங்களில் அதிகமாக பயன்படுத்துவதைக் காணலாம். (நீமொ 3:13; 8:32-33; திபா 32:1; 34:9).

பாபிலோனின் அடிமை நிலை காலத்திற்குப் பின் (கி.மு. 538) எழுதப்பட்ட ஞான இலக்கியங்களில் ஞானமும் திருச்சட்டமும் ஒன்று தான் என்கிற கருத்து வலுப்பெறுவதைக் காணலாம். நீதிமான்கள் நீரோடையின் அருகில் நடப்பட்ட மரத்திற்கு ஒப்பிடப்பட்டுள்ளனர். இதே கருத்தினை எரேமியா இறைவாக்கினர் (எரே 17:7-8) சுட்டிக்காட்டுகின்றார்; திபா 92:13-15இலும் இந்தக் கருத்து அழுத்தமாக வலியுறுத்தப்படுகிறது. இறைவனின் திருச்சட்டத்தை மன மகிழ்வுடன் ஏற்று அதன்படி வாழ முற்படுவோர் நிறைவுள்ளவராய், நற்பேறு பெற்ற நிலையில் இருக்கின்றனர். தீயவர்கள் ஆண்டவரின் வழியைவிட தங்களின் தனிப்பட்ட வழிக்கு முக்கியத்துவம் தருகின்றனர். தீயவர்களைக் குறிப்பிடுகின்றபோது, அவர்கள் காற்றினால் அடித்துச் செல்லப்படும் பதருக்கு ஒப்பானவர்கள் என்று திபா 1:4 கூறுகிறது. இறைவாக்கினர்கள் செப்பனியா (செப் 2:2) எசாயா (எசா 17:13) போன்றோர் தீயவர்களை பதருக்கு ஒப்பிட்டுக் கூறுவதை நாம் அறிகின்றோம். யோபு நூலிலும் இந்தக் கருத்து வலியுறுத்தப்படுகிறது. (யோபு 21:18)

ஒவ்வொரு மனிதனுக்கும் அவன் விருப்பம்போல செயல்படுவதற்கு கடவுளால் சுதந்திரம் அருளப்பட்டுள்ளது. கடவுளின் அன்புக் கொடையான




சுதந்திரத்தைத் தீயவர்கள் தவறாகப் பயன்படுத்துகின்றனர். ஆனால் தான் பெற்ற சுதந்திரத்தைப் பொறுப்புடன் பயன்படுத்துகின்றவர் அனைத்து நலன்களாலும் நிரப்பப்படுவர் என்கிற செய்தியை இத்திருப்பாடல் நமக்குத் தருகிறது. கடவுளின் திருவுளத்தை ஏற்று, அதைத் தெளிவாக நிறைவேற்றுதலில் தான் உண்மையான மகிழ்ச்சி இருக்கிறது. இறைவார்த்தையை ஆர்வத்தோடு கேட்பவர் அதைப்பற்றி ஆழமாகச் சிந்தித்து, அது சொல்லும் அறிவுரையை சிரமேற்கொண்டு வாழ்ந்து, இறைவனை மகிமைப் படுத்துவார். இப்பாடலை செபமாகப் பயன்படுத்திப் பலன்அடைய விரும்புபவர்கள் நிச்சயம் இயேசுவைப் பின்பற்றக் கூடியவர்களாய் இருப்பர். இயேசுவே நமக்கு நேரிய வழியையும், இறைவனின் திருவுளத்தையும் வெளிப்படுத்தியிருக்கிறார். இந்த திருப்பாடலில் கொடுக்கப்பட்டுள்ளபடியே, இயேசுவும் அவரால் வழங்கப்பட்டுள்ளக் கட்டளைகளைக் கடைபிடிப்பவர்களை நோக்கி என் தந்தையிடமிருந்து ஆசிபெற்றவர்களே, வாருங்கள்...மாட்சியை உரிமைப்பேறாகப் பெற்றுக்கொள்ளுங்கள் (மத் 25:34) என்று சொல்வதாகப் பார்க்கிறோம். ஆனால் பாவத்திலேயேப் புரண்டு கொண்டிருந்தவர்களை அணையாத நெருப்பில் தள்ளுவதையும் காண்கிறோம் (மத். 25:41)

## இயேசுவின் விண்ணேற்பு - அன்னை மரியாளின் விண்ணேற்பு (வேறுபாடு)

| இயேசு | அன்னை மரியாள் |
|---|---|
| 1. Assention | 1. Assumption |
| 2. இறைவல்லமையால் உயிர்ப்பு | 2. விண்ணகம் எடுத்துக் கொள்ளப்பட்டார் |
| 3. விண்ணகம் இருந்து மண்ணகம் வந்தது. | 3. மண்ணகம் இருந்து விண்ணகம் சென்றவர் |
| 4. இறை ஆற்றல் | 4. அமல உற்பவி |
| 5. இருப்பவர் | 5. உன்னத படைப்பு அருள் நிறைந்தவர் |
| 6. உயிர்ப்பை முன்னறிவித்தவர் | 6. இறை வல்லமை எதிர்நோக்கி எதிர்பார்த்தார் அரும்செயல் லூக்.1:49 |
| 7. உயிர்த்தபின் சீடருக்கு காட்சி | 7. விண்ணகம் சென்ற பின் பலருக்குத் தோன்றியது வேளை நகர் குழந்தை இயேசுவுடன் |

– **A.ஜோசப்சாமி,** கும்பகோணம்

# கல்யாணத்தாயின் வழிகாட்டுதல்

இன்றைய வாழ்வில் வழிகாட்டுதல் நமக்கு இன்றியமையாத ஒன்று. வழிகாட்டுதலின்படி நாம் நடந்தால் குறிப்பிட்ட இலக்கை அடைவது சுலபம். நம் பாதுகாவலியாம் அன்னை திருக்கல்யாணத் தாயின் வழிகாட்டுதலின்படி நாம் வாழ்ந்தால் வாழ்வில் வெற்றி நிச்சயம் என்பதை நமக்கு இக்கட்டுரை வழிகாட்டுகின்றது. அன்னை மரியாள் உயர்ந்த நற்பண்புகளை கொண்டிருந்தவராயிருந்ததால் அவர் நம் வாழ்க்கைக்கு வழிகாட்டியாக நமக்கு விளங்குகிறார். அவரிடம் தாழ்ச்சி, கீழ்ப்படிதல், பிறரன்பு, விசுவாசம், போற்றுதல், அர்ப்பணம், தியாக வாழ்வு போன்ற மிகச் சிறந்த பண்புகளைக் கொண்டிருந்தார்.



**தாழ்ச்சி :** லூக். 1:28 அருள் நிறைந்த மரியே வாழ்க! ஆண்டவர் உம்முடனே என வானதூதர் இறைவனின் திட்டத்தை அறிவிக்கின்றார். இதோ உம் அடிமை உமது வார்த்தையின்படியே ஆகட்டும் என தன்னை அடிமையாக தாழ்த்தி கீழ்ப்படிந்து, ஆண்டவரின் தாயாக தெரிந்துகொள்ளப்பட்ட பின்பும் பெருமை கொள்ளாமல் சாதாரணப் பெண் போல தன் அன்றாட வேலைகளைச் செய்கிறார். வீட்டைப் பெருக்கி சுத்தம் செய்வது, கிணற்றில் நீர் இறைத்து, குடம் சுமப்பது, சமையல் செய்வது, துணி துவைப்பது, தைப்பது போன்ற எல்லா வேலைகளையும் தானே செய்து நம் குடும்பங்களுக்கு வழிகாட்டுகிறார்.

**பிறரன்பு :** லூக்.1:40 எலிசபெத் அம்மாளுக்கு உதவி செய்ய விரைந்து செல்கிறார். ஒருவன் நன்மை செய்ய அறிந்திருந்தும், அதைச் செய்யாவிட்டால் அது அவனுக்குப் பாவம் என்று சொல்கிறது வேதாகமம். தனக்கே உதவி தேவைப்படும் சூழ்நிலையிலும் தன்னிலை மறந்து, பிறருக்கு உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணம் அன்னை மரியாளுக்கு இருந்தது. உரோ.16:16 தூய முத்தம் கொடுத்து வாழ்த்துங்கள் என பிறரன்பு குறித்துப் புனித பவுல் கூறுகிறார்.

**விசுவாசம்:** லூக்கா 1:45 ஆண்டவர் சொன்னது நிறைவேறும் என நம்பிய நீர்பேறு பெற்றவர் என எலிசபெத் அம்மாள் விசுவாசத்தின் அன்னையான மரியாளை வாழ்த்துகிறார். ஏசாயா 28:16 விசுவசிப்பவர்கள் இடற மாட்டார்கள் என இறைவன் கூறுகிறார். இவ்வாறாக விசுவாசத்தின் தாயாக நமக்கு வழிகாட்டியாகத் திகழ்கின்றவள் நம் திருக்கல்யாணத் தாய்.

**போற்றுதல் :** ஆண்டவரைப் போற்றிப்புகழ்ந்தார் நம் அன்னை மரியாள் ஆண்டவருக்கு அஞ்சி நடந்து நம்பிக்கையுடன் காத்திருப்போரிடம் அவர் மகிழ்ச்சி அடைகிறார் என சங்கீதக்காரன் இறைவனைப் போற்றி புகழ்கிறார். (தி.பா. 150)

துதிகளின் மத்தியில் வாழும் இறைவனை என்றென்றும் நாம் போற்றிப் புகழ வேண்டுமென நம் அன்னை மரியாள் நமக்கு வழிகாட்டுகிறார்.

**அர்ப்பண வாழ்வு :** லூக். 2:22 தன் ஒரே மகன் இயேசுவை தியாகம் செய்ய முன்வந்து அவரை ஆண்டவருக்கு அர்ப்பணித்து இறைவனின் திருச்சட்டத்தை நிறைவேற்றுகிறார். இதன் மூலம் நாமும் இறைவனுக்கு உகந்த அர்ப்பண வாழ்வு வாழ அன்னை நமக்கு வழிகாட்டுகின்றார். 1 பேதுரு 3:8 ஒரு மனப்பட்டு இரக்கம், அன்பு, பரிவு கொண்டு வாழ அன்னை நம்மை அழைக்கிறார்.

தாயைப் போல பிள்ளை நூலைப் போல சேலை என்ற பழமொழிக்கேற்ப நாமும் நம் தாய் திருக்கல்யாணத் தாயின் அன்பு பிள்ளைகள் என்பது உண்மையானால் அவரைப் போல வாழ்வோம். திருக்கல்யாண மாதா நம் வாழ்வின் வழிகாட்டியாக நம்மை அருள்வாழ்வுக்கு அழைத்துச் செல்கிறார். அவர் வழி நடப்போர் பாக்கியவான்கள். அன்னை வழி நடப்போம். நிறை வாழ்வு அடைவோம்.

– Y.V.**ராஜ்,** சென்னை–106.

# சனிக்கிழமை வந்தாச்சு...

வந்தாச்சம்மா வந்தாச்சு சனிக்கிழமை வந்தாச்சு... கல்யாணத் தாயின் கருணையைப் பெற்றிடும் காலம் வந்தாச்சு... எனவே பொற்பைக்கு போகலாம் வாரீர், கல்யாணத்தாயின் கருணை மழையைப் பெற்றிட பொற்பைக்கு போகலாம் வாரீர்.

வெள்ளம் போல் மக்கள் கூட்டம் வீறுகொள் பக்தர்கள் கூட்டம். என்ன! கேட்க விந்தையாக இருக்கிறதா? ஆம்! விந்தையிலும் விந்தைதான். சிங்காரத் தேரினிலே திருக்கல்யாணத் தாய் பவனிவரும் காட்சி சிந்தையெல்லாம் குளிர வைப்பது விந்தைதான்.

வெற்றி பெற்ற ஓர் அரசனோ அல்லது அரசியோ நகர் வலம் வரும்போது பரிவாரங்கள் அணி அணியாய் அணிவகுத்துச் செல்ல மெய்க்காப்பாளர்கள் புடைசூழ, பல்வகை வாத்தியங்கள் முழங்க தேரினிலே கம்பீரமாய் அமர்ந்து செல்வார்கள். அதுபோல பொற்பையிலே நம் விண்ணக மண்ணக அரசியாம் திருக்கல்யாணத்தாய் சனிக்கிழமை தோறும் மாலை 6.30 மணிக்குஅலங்காரத் தேரினிலே ஒய்யாரமாய் உலா வருகிறாள். அவ்வமயம் பக்தர்கள் அணி அணியாய் செல்கின்றனர். வண்ண வண்ண விளக்குகளில் எரியும் திரிகளை ஏந்தி ஜெபித்துக் கொண்டும் பாடிக்கொண்டும் செல்லும் காட்சி மெய்சிலிர்க்க வைக்கிறது. எங்கு நோக்கினும் மக்கள் வெள்ளம். கண்ணுக்கெட்டா தூரம் வரை நீண்ட வரிசை. ஆராவாரமின்றி அமைதியாய் அன்னையை அழைத்துச் செல்கின்றனர்.

திருக்கல்யாணத் தாய் தன் அருட்கரத்தால் அருளாசீரை மழையென பொழிந்து மக்களை மகிழ்விக்கின்றாள். திருப்பவனி முடிந்ததும் திருப்பலி நிறைவேற்றப்படுகிறது. அன்னையின் திருமகனின் நிறையாசீரைப் பெற்று இறைமக்கள் நிறைவுடன் இல்லம் செல்கின்றனர். இந்நிலை தொடர்ந்து வளர்ந்து, பொற்பை மாநகர் விரைவில் தென்னக லூர்து நகராய் மாறும் என்பது வெள்ளிடை மலை.

–நல்லாசிரியை **ஞா.ரெஜினாள்மேரி,** பொற்பை

# முதல் சனி வழிபாடு

திருக்கல்யாணத்தாய் திருத்தலத்தில் ஆகஸ்ட் மாத முதல் சனி வழிபாட்டு நிகழ்வுகள் 02.08.2014 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. காலை 9.00மணி முதல் 10.00 மணிவரை நற்கருணை ஆராதனை வழிபாடு நடைபெற்றது. 10.00 மணி முதல் 11.00 மணி வரை மலையாளத்தில் திருப்பலி நடைபெற்றது. 11.00 மணிக்கு தமிழிலும் மலையாளத்திலும் ஜெபமாலை ஜெபித்துக்கொண்டு அன்னையின் புகழ் பாக்கள் பாடிக்கொண்டு ஆலயத்தைச் சுற்றி அன்னையின் சப்பரப்பவனி நடைபெற்றது.

அதன்பின் நவநாள் ஜெபம் விண்ணப்பங்கள் ஒப்புக்கொடுத்தல் திருப்பலி கருத்துக்கள் ஒப்புக்கொடுத்தல் நடைபெற்றது. 12.00 மணிக்கு 13 குருக்கள் இணைந்து நவநாள் திருப்பலியை ஒப்புக்கொடுத்தார்கள். திருப்பலி நிறைவு பெற்றவுடன் நோயாளிகளை மந்திரிக்கும் சடங்கு நடைபெற்றது.

வருகை தந்திருந்த அனைத்து மக்களுக்கும் காலையில் பொங்கல் அதன்பின் குளிர்பானம் குழந்தைகளுக்கு பாலும், திருப்பலி நிறைவு பெற்ற பின் திருத்தலத்தின் சார்பாக மதிய உணவும் வழங்கப்பட்டது. பல்வேறு இடங்களிலிருந்து **200** வாகனங்களுக்கு மேலாகவும் மற்றும் பேருந்துகள் வழியாகவும் சுமார் **10000** க்கு மேற்பட்ட அன்னையின் பக்தர்கள் கலந்து கொண்டு அன்னையின் ஆசீரைப் பெற்றார்கள். அதன் பின் மாலை 4.00 மணிக்கும் 6.30 மணிக்கும் பக்தர்களுக்கு சிறப்புத் திருப்பலி நடைபெற்றது.

**– திருத்தல அதிபர்**

# தெய்வீக அன்பும் – திருமலையும்

மலை மேல் இருக்கும் நகர் மறைவாய் இருக்க முடியாது மத் ?5:14 கிழக்கே சிவந்து உதித்து, மேற்கே சிவந்து மறையும் கதிரவனும் இறைவன் காலடிதனிலே. திருகோவிலின் முற்றமும் பறந்து விரிந்த சமுத்திரமும் இறைவனது காலடி தனிலே.

கடல் அலைகள் இறைவனை ஓயாது புகழ்பாடுவதும் தலை வணங்கி கரைதனை தொட்டுச் செல்வதும் மகிழ்வானதே. கலங்கரை விளக்கின் ஒளியும், இருளை நீக்கி சுடர்கின்றதே. ஆண்டவர் திருவாய் மலர்ந்து போதித்த மலையும் திருமலையானது. மலையின் கீழ் மணவை மாநகர் ஜெருசலேம் பட்டணமாக திகழப்படுகிறது. என் பின்னே வாருங்கள் என அழைக்க பெற்றதும் கலிலேயா கடற்கரையானது. பரிசுத்த ஆவியின் ஆலயமும் வானுயர்ந்து சிறப்பு பெறுகிறது. திரும்பும் திசையெல்லாம் புனிதர்களின் சிற்றாலயம் புனிதம் தெரிகிறது. ஞானஸ்நானம் வழங்கி கிறிஸ்தவர்கள் என முத்திரை பதித்ததும் புனித சவேரியார் பாதம் பதித்த இடமும் சின்ன கோவா ஆனது. இறை சாட்சியாக முதலில் மரித்து ஆண்டவரின் முதல் அன்பை பெற்ற புனித யாகப்பர் ஆலயம் மணவையின் பங்காக போற்றுகிறது. கடல் நீரும் சுவைமிகு நீரும் ஊற்றுகள் சுரந்திடும் தண்ணீரும் அதிசயமானதே. திருமலையின் திருசிலுவையும் கல்வாரி மலையானது தெய்வீக அன்பின் நுழைவுவாயில் இதுவே என பாசறையானது மணவை மாநர். திருசிலுவை நாதரின் மகிமையினால் மணவை மாநகர் சிறப்பு பெறுகிறது. எல்லா புகழும் மாட்சிமையும் என்றென்றும் உமக்குரியதே. யேசுவுக்கே புகழ்.

**- செல்வம் அம்மாள்,** பொற்பை

# வாழ்த்துக்கள்!

**தூத்துக்குடி மறைமாவட்டம் வள்ளியூர் மண்டலத்தின் முதன்மைக் குரு பேரருட்திரு. முனைவர். R.ஜோசப் ரவிபாலன் அவர்களுக்கு வாழ்த்துக்கள்!**



பொத்தக்காலன்விளை பங்குத் தந்தையும், திருக்கல்யாணமாதா திருத்தலத்தின் அதிபருமாக இறைப்பணியாற்றிக் கொண்டிருக்கும் பேரருட்திரு. முனைவர் **R.**ஜோசப் ரவிபாலன் அடிகளார் 15.08.2014 முதல் தூத்துக்குடி மறைமாவட்டம், 49 பங்குகள் அடங்கிய வள்ளியூர் மண்டலத்தின் முதன்மைக் குருவாக மேதகு ஆயர் அவர்களால் நியமிக்கப் பட்டுள்ளார்கள்.

தந்தை அவர்கள் சாத்தையில் உதித்து தனது ஆரம்பக் கால கல்வியை 1முதல் 8வரை சாத்தான்குளம் தூய இருதய நடுநிலைப்பள்ளியில் பயின்றார்கள். அதன்பின் தூத்துக்குடி சிறுமலர் குருமடத்தில் சேர்ந்து 9 முதல் 11 வரையானக் கல்வியை 1973-1975 தூத்துக்குடி புனித பிரான்சிஸ் சேவியர் உயர்நிலைப் பள்ளியில் பயின்றார்கள். **P.U.C.**கல்வியை 1976-1977ல் தூத்துக்குடி காமராஜ் கல்லூரியில் பயின்றார்கள். 1977-1978 வரை மதுரை புனித பேதுரு குருமடத்தில் உயர்குருமட தொடக்கக் கல்வியை பயின்றார்கள். 1978 முதல் 1986வரை பெங்களூர் புனித பேதுரு குருத்துவக் கல்லூரியில் தனதுஉயர் குருமடக் கல்வியை பயின்றார்கள். 04.05.1986 அன்று வள்ளியூரில் தந்தை அவர்கள் குருவாக திருநிலைப்படுத்தப்ட்டார்கள். தனது குருத்துவப்பணியில் 1986 முதல் 1987வரை ஆயரின் செயலாளராவும், 1987-88 வரை மணப்பாடு புனித யாகப்பர் ஆலய உதவிப் பங்கு தந்தையாகவும் 1988-89 வரை வடக்கள்குளம் உதவிப் பங்குத் தந்தையாகவும், 1989-94 வரை செய்துங்கநல்லூர் பங்குத் தந்தையாகவும், 1994-95வரை தூத்துக்குடி புனித தாமஸ் ஆங்கிலப்பள்ளியில் ஆசிரியராகவும், 1995-2000 வரை வடக்கன்குளம் புனித தெரசா மேல்நிலைப்பள்ளியில் ஆசிரியராகவும் பணியாற்றி 1997-99வரை பெங்களூர் புனித பேதுரு குருத்துவ கல்லூரியில் விவிலியத்தில் முதுகலைக் கல்வியைப் பயின்றார்கள். 2002 -13 வரை சென்னை பூந்தமல்லி தூய இருதயக் குருத்துவக் கல்லூரியில் விவிலிய பேராசிரியராக பணியாற்றினார்கள். இந்தக் காலக் கட்டத்தில் ஃபிரான்ஸ் நாட்டில் பாரீஸ் நகரத்தில் 18.08.2002 முதல் 08.02.2003 வரையும், இத்தாலி நாட்டில் ரோமை நகரில் 09.02.2003 முதல் 11.06.2006வரை எரேமியா இறைவாக்கினர் பற்றி ஆராய்ச்சி செய்து விவிலியத்தில் முனைவர் (டாக்டர்) பட்டம் பெற்றார்கள். 2013 முதல் 2014 வரை ஓராண்டு விடுப்புக்கு பின் 01.06.2014 முதல் பொத்தக்காலன்விளை பங்குத் தந்தையாகவும், திருக்கல்யாண மாதா திருத்தலத்தின் அதிபராகவும், பொறுப்பேற்று இறைப்பணியாற்றி வருகிறார்கள். 15.08.2014 முதல் தூத்துக்குடி மறைமாவட்டம் 49 பங்குகள் அடங்கிய வள்ளியூர் மண்டலத்தின் முதன்மை குருவாகவும் பணியேற்று இறைபணியாற்றி வருகிறார்கள். தந்தை அவர்களின் வழி நடத்துதலால் வள்ளியூர் மண்டலம் இறைவனின் நிறை ஆசியைப் பெற்று வளர்ச்சிப் பாதையில் சென்றிட பேரருள் தந்தையை வாழ்த்துகின்றோம்.

- **T.ஜெயசீலன் அந்தோணிராஜ்**, ஆசிரியர்



அருள்தரும் இமயம்
# திருக்கல்யாணத்தாயின்
## அற்புதங்கள்...
## சாட்சிகள்...

1 நற்சுகம் கிடைத்தமைக்கு நன்றி – **மரியகாடு, மரியசெல்வம்**

2 குழந்தை பாக்கியம் கிடைத்தற்கு நன்றி– **கண்டன்விளை அமுதா**

3 திருமண வரம் கிடைத்தமைக்கு நன்றி – **மரியநாடு ஆண்டனிஜெயா**

4 விபத்தில் உயிர் பிழைத்தமைக்கு நன்றி – **கோவில்பட்டி ஜெலின் டினோ**

5 சுகப்பிரசவம் கிடைத்தமைக்கு நன்றி — **நீரோடி, சுபதா**

6 கல்லூரியில்இடம் கிடைத்தமைக்கு நன்றி —**தூத்துக்குடி ஜெனி ஜெரோம்**

7. நல்ல இல்லம் அமைந்தமைக்கு நன்றி – **புன்னக்காயல் மிக்கேல்**

8 +2வில் வெற்றி பெற்றமைக்கு நன்றி – **ஹெலன்நகர் ஜோஸ் அபின்**

9 வேலை திருமணம் கிடைத்தமைக்கு நன்றி –**அழகை மரிய ரஸல்**

10 திருமணம் நல்ல முறையில் நடந்தமைக்கு நன்றி–**இணையம் லாய்டுஜீனி**

11 குழந்தை வரம் கிடைத்ததற்கு நன்றி – **உவரி கிங்ன் ஆா**

12 10 வகுப்பில் தேர்ச்சி பெற்றதற்கு நன்றி – **கோவளம் விஜில்டா**

13 ஜவுளித் தொழில் முன்னேற்றத்திற்கு நன்றி – **காட்டுக்கடை நிர்மலா**

14 நினைத்த காரியம் நடந்ததற்கு நன்றி – **பொழியூர் ஜாண்சன்**

15 சுகப்பிரசவம் கிடைத்தமைக்கு நன்றி – **பூவார் சிலுவையம்மா**

16 அரசு வேலை கிடைத்ததற்கு நன்றி – **கீழ மணக்குடி ஸ்டெல்லா**

17 நற்சுகம் பெற்று தானாகவே சுய வேலைகள் செய்ய வலிமையை தந்த அன்னைக்கு நன்றி – **மரிய நாடு, ஜோபி**

18 விசா கிடைத்தமைக்கு நன்றி – **சின்னத்துரை, மரியவிஜயன்**

19 வெளிநாடு வேலை கிடைத்தமைக்கு நன்றி – **விழிஞம் பயஸ்**

20 ஸ்பின்னர் போட் தொழில் முன்னேற்றத்திற்கு நன்றி – **வாணியக்குடி அந்தோணி**

21 தீராத வழக்கில் வெற்றி கிடைத்தமைக்கு நன்றி – **புதியதுறை வர்க்கீஸ் மெல்ஸிட்டா**

22 சர்க்கரை நோய் தீர்ந்தமைக்கு நன்றி – **கேசவன்புத்தன்துற லாரன்ஸ்**

23 விபத்திலிருந்து உயிர் காத்தமைக்கு நன்றி – **பொற்பை அந்தோனி செல்வராஜ்**

23 நற்சுகம் கிடைத்தமைக்கு நன்றி – **பொற்பை Y.சேசு அமிர்தராஜ்**

– **திருத்தல அதிபர்**



# மனதைப் பயன்படுத்துதல்

மனம் என்பது எண்ணங்களின் விளைநிலம். விளை நிலம் எந்த அளவுக்கு காப்பாற்றப்படுகிறதோ, பண்படுத்தப்பட்டிருக்கிறதோ அந்த அளவுக்குத்தான் எண்ணங்களின் ஆற்றலும் பயனும் அடையும்.

மனத்தைப் பயன்படுத்துதல் என்றால் தக்கதொரு இலட்சியத்தைத் திட்டமிட்டு அமைத்துக்கொள்வது. சரியான இலட்சியம் மனத்தில் நிலைபெறும் போது நல்ல எரு ஊட்டப்பட்ட நிலத்தின் தன்மையை மனம் பெறுகிறது. மனதில் உயர்ந்த குறிக்கோள் கலந்துவிட்டால் அந்த மனத்தில் முளையிடும் எண்ணங்களிலும் உயர்வுநிலை அமைந்துவிடும். எண்ணங்களின் தன்மையில் உயர்வு நிலை அமையும்போது நமது செயற்பாட்டின் இயல்பிலும் உயர்ந்த பாணி அமைந்துவிடுவது இயல்பாகிவிடுகிறது. செயற்பாட்டில் உயர்ந்த இயல்பு பிரதிபலிக்கும்போது செயலின் – உழைப்பின் – பயனிலும் உயர்ந்த ஒருநிலை தானாகவே வந்துசேரும். தெருவிளக்கில் படித்து பின்னால் உயர்ந்த நீதிபதி ஸ்தானத்தை எட்டிப்பிடித்த பேரறிஞர்களைப் பற்றிப் படிக்கிறோம். உழைப்பு என்ற சொல்லின் உள்ளார்ந்த கருத்து செயல் என்பதாகும். ஏதாவது ஒரு வியத்தில் தன்முனைப்புடன் செயல்படும்போது அது உழைப்பு என்று பெயர் பெறுகிறது. செயல்களுக்கு அடிப்படை என்ன என்று யோசிக்கும்போது எண்ணங்கள்தான் செயல்வடிவம் பெறுகினறன என்ற உண்மை விளங்கும்.

நாம் மனத்தில் எதைப்பற்றி எண்ணுகிறோமோ அதையே வாழ்க்கையில் செயற்படுத்த முனைகிறோம். எண்ணாமல் செயலில் ஈடுபடுபவன் அறிவுத் தெளிவுள்ளவனாக இருக்கமுடியாது. நம்முடைய எண்ணங்களின் தன்மை எப்படியிருக்கின்றதோ அதையொட்டியே செயலின் இயல்பு அமையும்.

ஏதாவது ஓர் இலட்சியத்தை சிந்தையில் நிறுத்தி அதைப்பற்றி இடைவிடாது எண்ணிக்கொண்டே இருப்பவன் என்றாவது ஒரு நாள் எண்ணிய எண்ணப்படி தன் இலட்சியத்தை அடைந்தே தீருவான்.

ஒரு மனிதன் நல்ல இலட்சியங்களைப் பற்றி மனம் ஒன்றி எண்ணுவா னாயின் அவனுடைய செயலிலும் அதே நல்ல தன்மை பிரதிபலிக்கும். ஒருவன் தீய எண்ணங்களை மனத்திலே தேக்கி அதே நோக்கமாய் இருப்பானாயின் அவனுடைய செயல் முறைகளிலே தீமையின் நிழலைத்தான் காணமுடியும். சிலர் கடுமையாக உழைப்பார்கள் ஆனால் அவர்கள் உழைப்பிற்கு அடிப்படையான எண்ணங்கள் இருப்பதில்லை. உழைப்பது ஒரு கடன்என்ற நோக்கில் அவர்கள் உழைக்கிறார்களே தவிர ஓர் இலட்சியத்தை முன்னிறுத்தி உழைப்தில்லை. எண்ணங்களின் அடிப்படையில் உழைக்கும் போதுதான் ஒருமனிதனின் திறமை மெருகேறி செய்தொழிலில் நேர்த்தி அமையும்

எண்ணங்களுக்கு பெரு வலிமையும், பேராற்றலும் உண்டு என்பதை உணர்ந்தவர்களாய் வாழ்வில் உயர்வடைய முயற்சி எடுப்போம்.

– **A.அமல பென்சி,** கொழுந்தட்டு



# நல்ல செயல்களையே செய்ய நினையுங்கள்

**பயன்தரும் நல்ல செயல் :**

நல்ல செயல் என்பது பிறருக்கு எந்த வகையிலும் கெடுதலை ஏற்படுத்தாத ஒரு செயலாகும். காண்பவர் பலரும் பாராட்டும் செயலும் ஆகும். இந்தச் செயல் பயனற்றதாகவும் இருக்கக்கூடாது. ஒரு செயலைச் செய்தால் அதன்பயனாக ஏதாயினும் சில நன்மைகளை அடையவேண்டும். சிறந்த செயலைச் செய்கின்றான் என்று மற்றவர்கள் உங்களைப் புகழ வேண்டும். இத்தகைய செயலையே செய்ய விரும்புங்கள்.

**புகழ் தரும் செயல் :**

உங்களுடைய நல்ல பெயரை கெடுக்கும் எந்தச் செயலையும் செய்வதற்கு நினைக்காதீர்கள். அதைச் செய்வதன் மூலம் எத்தகைய பெரிய பெரிய நன்மைகள் கிடைப்பதாக இருந்தாலும், அதைச் செய்ய நினைக்காதீர்கள். அந்தப் பெரிய பெரிய நன்மைகளைவிட உங்ள் நல்ல பெயரைக் கெடாமல் காப்பது தான் உங்களுக்கு முதன்மையானது என்று நினையுங்கள்.

**இழிவான செயல் கூடாது :**

அறிவு. தெளிவு பெற்றவர்கள் தாம் துன்பத்தில் சிக்கிக் கொண்டாலும் இழிவான ஒருசெயலை செய்வதற்கு துணிய மாட்டார்கள். அவர்களையே நீங்களும் பின்பற்றுங்கள் எத்தகைய நெருக்கடி ஏற்பட்ட போதும் இழிவான ஒரு செயலை செய்வதற்கு எண்ணாதீர்கள்.

**வருத்தம் தருவதும் கூடாது :**

ஒரு செயலைச் செய்த பின்னர் இப்படிச் செய்துவிட்டோமே? என்று வருந்துவதற்கு நேரிடும் எதையுமே செய்ய நினைக்காதீர்கள். அதைச் செய்யும் எண்ணத்தை மனதை விட்டு முழுவதுமாகவே அகற்றிவிடுங்கள்

**பழிச்செயல் வேண்டாம் :**

நல்லவர்கள் பழிக்கக்கூடிய எந்த ஒரு செயலையும் எந்தக் காலத்திலும் செய்ய நினைக்காதீர்கள். உங்களைப் பெற்ற தாயானவள் பசியால் துடிப்பதைக் கண்டாலும் கூடப் பழிச்செயலைச் செய்ய நினைக்காதீர்கள். உங்கள் தாயின் பசியை போக்குவது மிகவும் அவசியம்தான். உங்கள் கடமைதான். ஆனால் பழிதரும் செயலைச் செய்தாவது காப்பாற்ற நினைப்பது மட்டும் கூடாது.

**வஞ்சிக்க நினைக்காதீர்கள் :**

வஞ்சனையால் பொருளைச் சேர்க்க நினைக்காதீர்கள். அந்தப் பொருட்கள் உங்களைவிட்டு போய்விடும் என்பதை மறவாதீர்கள். பிறர் கதறி அழும்படி ஒருவரை மிகவும் வருத்தி அவரிடமிருந்து பறித்துக்கொள்ளும். பொருட்களும் உங்களிடம் நிலைக்காது. நீங்கள் கதறிப் புலம்புமாறு உங்களை விட்டு அவை போய்விடும்.

பிறர் பாராட்டும் செயல்களையே செய்ய விரும்புங்கள். முதலில் சிறிது நட்டம ஏற்பட்டாலும் பிறகு உறுதியாக நன்மைகளைப் பெறுவீர்கள்.

–**A. பெபி.** கொழுந்தட்டு

# பனிமயமாதா
# ஒரு வரலாற்றுப் பின்னணி



-அருட்திரு முனைவர் R.ஜோசப்ரவிபாலன்
திருத்தல அதிபர்
திருக்கல்யணமாதா திருத்தலம், பொத்தக்காலன்விளை

ஒவ்வோர் ஆண்டும் ஆகஸ்டு மாதம் 5ஆம் நாள் பனிமய மாதாவின் விழா கொண்டாடப்படுகிறது. அந்த விழா கொண்டாடப் படுவதற்கான ஒரு பாரம்பரியப் பின்னணி இருக்கிறது. கி.பி. 352 முதல் கி.பி. 366 வரை திருச்சபையை வழி நடத்திய திருத்தந்தை லிபேரியூஸ் உரோமை நகரிலுள்ள எஸ்குலின் என்கிற குன்றின் மேல் கி.பி. 355ஆம் ஆண்டில் ஓர் ஆலயத்தைக் கட்டினார். அது 'லிபேரியப் பேராலயம்' (Basilica Liberiana) என்று அழைக்கப் பட்டது. அந்த ஆலயம் அன்னை மரியாவுக்காகக் கட்டப்பட்ட ஆலயம் என்று ஒரு சிலர் கருதுகின்றனர். அந்த ஆலயம் யாருக்கு அர்ப்பணிக்கப்பட்டது என்பது தெரியவில்லை என்று வேறு சிலர் கூறுகின்றனர்.

90 ஆண்டுகளுக்குப் பிறகு, கி.பி. 445ஆம் ஆண்டில் திருத்தந்தை மூன்றாம் சிக்ஸ்து (Sixtus III) லிபேரியப் பேராலயத்தை மிகப் பெரிதாகக் கட்டி, அதை அன்னை மரியாவுக்கு அர்ப்பணித்தார். கி.பி. 431ஆம் ஆண்டில் எபேசு நகரில் நடைபெற்ற திருச்சபையின் பொதுச் சங்கம் அன்னை மரியாவை 'கடவுளின் தாய்' என்று பிரகடனம் செய்தது. அன்னை மரியாவின் பக்தி திருச்சபையில் அறிமுகம் செய்யப்பட்டு வளர்ந்து வந்த நேரம் அது. நெஸ்டோரியுஸ் என்பவரும் அவரது ஆதரவாளர்களும் மரியாவை 'கடவுளின் தாய்' என்று ஏற்க மறுத்தனர். மரியா 'இயேசுவின் தாய்' அல்லது 'கிறிஸ்துவின் தாய்' என்று அழைக்கப்படலாமேயொழிய 'கடவுளின் தாய்' என்று அழைக்கப்பட முடியாது என்பது நெஸ்டோரியுஸ் மற்றும் அவரது ஆதரவாளர்களின் வாதம். ஆனால் திருச்சபை அவர்களின் வாதத்தை ஏற்காமல் மரியா 'கடவுளின் தாய்' என்று அறிவித்தது. அன்னையைப் பற்றிய இந்த மாபெரும் உண்மையை உலகறியச் செய்யும் நோக்குடன் இந்த ஆலயம் பெரிதாகக் கட்டப்பட்டதாக அறிகிறோம்.

திருத்தந்தை மூன்றாம் சிக்ஸ்து மரியாவுக்குக் கட்டிய இந்த ஆலயம்தான் மேற்கத்தியத் திருச்சபையில் மாதாவுக்காகக் கட்டப்பட்ட ஆலயங்களிலே மிகவும் பழமையானதும் பெரியதும் ஆகும். இந்த ஆலயம் புனித பெரிய மாதா (Santa Maria Maggiore – Saint Mary Major) என்று அழைக்கப்படுகிறது. உரோமை நகரில் கணக்கிலடங்கா ஆலயங்கள் உள்ளன. அவற்றுள் மிகவும் பிரசித்திப் பெற்றப் பேராலயங்கள் நான்கு. அந்த நான்கில் ஒன்றுதான் புனித பெரிய மாதா ஆலயம் (மற்றவை: புனித யோவான் லாத்தரன் பேராலயம், புனித பேதுரு பேராலயம், புனித பவுலின் பேராலயம்).

கி.பி. 7ஆம் நூற்றாண்டிலிருந்து இந்த ஆலயம் 'தீவனத் தொட்டியின் புனித மரியாவின் ஆலயம் (Basilica of St. Mary of the Holy Manger) என்றும் 'குடிலருகே புனித மரியாவின் பேராலயம்' (Basilica of St. Mary at the Crib) என்றும் அழைக்கப்பட்ட்து. குழந்தை இயேசுவை அன்னை மரியா தீவனத் தொட்டியில் கிடத்தியிருந்தார் என்று லூக்காவின் நற்செய்தியில் குறிப்பிடப் பட்டுள்ளது (லூக் 2:7,12,16). குழந்தை இயேசு பெத்லகேமில் பிறந்த இடத்திலிருந்துப்

பெறப்பட்டுள்ள புனிதப் பொருள்களுக்கு இந்தப் பேராலயத்தில் மக்கள் வணக்கம் செலுத்தியக் காரணத்தினால், மேலே கூறப்பட்டுள்ள விதத்தில் இந்தப் பேராலயம் அழைக்கப்படுகிறது.

இந்தப் பேராலயம் குறித்து இன்னுமொரு பாரம்பரியம் இருக்கிறது. கி.பி. 355ஆம் ஆண்டில் திருத்தந்தை லிபேரியூஸ் ஆலயம் கட்டுவதற்கான இடத்தைத் தேர்வு செய்து, தீர்மானித்த இடத்தில், அதே ஆண்டில் ஆகஸ்டு 4 ஆம் நாள் இரவில் அதிசயிக்கக்கூடிய அளவில் ஏராளமான பனி படர்ந்திருந்ததாகக் கூறப்படுகிறது. பொதுவாக ஐரோப்பிய நாடுகளில் ஆகஸ்டு மாதத்தில் கோடையின் உச்சக்கட்டத்தைக் காணலாம் ( நம் பகுதியில் மே மாத்த்தைப் போல!). கோடையின் வெப்பம் அதிகமாக இருந்த அந்த இரவில் பனி விழுந்தது அதிசயத்திலும் அதிசயம். ஆகவே இந்தப் பேராலயம் 'பனிமய மாதா' பேராலயம் என்றும் அழைக்கப்படுகிறது.

லூக்கா தம் கைப்பட வடிவமைத்த மாதாவின் திருவுருவம் இந்தப் பேராலயத்தில் வைக்கப்பட்டுள்ளது. மாதாவின் இந்த உருவம் 'உரோமை மக்களின் நல வாழ்வு' (Our Lady 'Salus populi Romani'-'Health of the Roman people') என்று அழைக்கப்படுகிறது. அந்தப் பேராலயத்தின் மீது நம் திருத்தந்தை ஃபிரான்சிஸ் தனிப் பற்று வைத்துள்ளார் என்பது மிகத் தெளிவு. அவர் அகில உலகத் திருச்சபையின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மறுநாள் (14.03.2013) இந்தப் பேராலயத்திற்குச் சென்று செபித்தார்.. 2013ஆம் ஆண்டு மே மாதம் 4ஆம் நாள் அங்கே சென்று திருச்செபமாலை செபித்தார். அதே ஆண்டு மே மாதம் 30ஆம் நாள் இயேசுவின் திருவுடல் திரு இரத்தப் பெருவிழாவின்போதும் அங்கே சென்றார். உலக இளைஞர் தினத்தில் கலந்துகொள்வதற்காக பிரேசில் நாட்டிற்குச் செல்வதற்குமுன் ஜூலை மாதம் 20ஆம் நாள் இந்த ஆலயத்திற்கு வந்து செபித்தார். ஜூலை மாதம் 29 ஆம் நாள் பிரேஸில் நாட்டிலிருந்து திரும்பியதும் சென்றார். இவை தவிர இன்னும் நான்கு வெவ்வேறு நாள்களில் (08.12.2013, 01.01.2014, 23.05.2014, 19.06.2014) நம் திருத்தந்தை இந்தப் பேராலயத்திற்குச் சென்றதாகக் கூறப்படுகிறது. இவ்வாண்டு ஜூன் மாதம் 19 ஆம் நாள் இயேசுவின் திருவுடல் திரு இரத்தப் பெருவிழாவன்று நடந்த வருடாந்திர நற்கருணைப் பவனியின் முடிவில் இந்தப் பேராலயத்தின் வெளிப்புறத்திலிருந்து மக்களை ஆசீர்வதித்தார். ஐந்து நாள் பயணமாக தென் கொரியாவிற்குப் புறப்படுவதற்கு முன்பு ஆகஸ்டு 13ஆம் நாள் முற்பகல் 11 மணி அளவில் திருத்தந்தை மீண்டும் ஒருமுறை இந்த பேராலயத்திற்குச் சென்று மாதாவுக்கு மலர்களை அர்ப்பணித்து 15 நிமிடங்கள் செபித்துவிட்டுச் சென்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

**தன் தென் கொரியப் பயணத்தை முடித்துவிட்டு, பன்னிரண்டு மணி நேர விமானப் பயணத்திற்குப்பின், ஆகஸ்டு 19ஆம் நாள் உரோமைக்குத் திரும்பியவுடன் நேராக திருத்தந்தை இந்தப் பேராலயத்திற்குச் சென்றார்.**



# ஞானத்தின் இருப்பிடம் மரியா



திருவழிபாட்டில், மரியா ஞானத்தின் இருப்பிடம் என புகழப்படுவதோடு, அத்தகைய ஞானத்தின் பதிலியாகவும் பார்க்கப்படுகிறார். திருச்சபைப் பாரம்பரியம், ஞானம் பற்றிய மிக ஆழமான, அழகான பகுதிகளை நீதிமொழிகள் நூலிலிருந்து எடுத்து ஆராய்ந்து அதனை மரியாவின் குண நலன்களோடு ஒப்பிட்டுப் பார்க்கின்றது (நீதி மொ. 8:1 -9:6). கடவுளின் அதிசயங்கள் ஞான வடிவிலே அவரில்புதைந்து கிடக்கிறது. எனவே தான் தன்னை நாடி வரும் கோடிபேருக்கு நன்மைகளை அதியங்களாகப் பொழிகின்றார். சீராக்கின் ஞானம் 24 ம் அதிகாரமும் மரியாவோடு தொடர்புடைய பகுதி என திருச்சபைப் பாரம்பரியம் சுட்டிக்காட்டுகிறது. இவ்வாறு, மரியா, ஞானம் நிறைந்து ஞானியாக நின்று, ஞானத்தை அனைவருக்கும் அள்ளித் தெளிக்கும் பரந்துவிரிந்த ஆழியாகின்றனர். அவரது ஞானத்தைப் பெற்றிட, கோடான கோடி மக்கள் கூட்டம் கூட்டமாக அவரது ஆலயம் தேடிச் செல்கின்றனர். ஞானம் நிறைந்த அவரது ஆசீரை அள்ளிப் பருகுகின்றனர். அவரது ஞானம் கருணை வடிவானது. ஒளிவடிவில் பிரகாசிக்கின்றது. அன்பு வடிவில் அசைவாடுகிறது. ஞானம் ஒருவன் முகத்தை ஒளிமயமாக்கும் அதிலுள்ள கடுகடுப்பை நீக்கும் (சபை உரை 8:1) இத்தகைய ஞானம் மரியாவின் முகத்தை மட்டுமல்ல அவரது வாழ்வையே ஒளிமயமாக்கியது.

தூய ஆவியின் கொடைகளில் ஒன்று ஞானம். மரியா தனது தாயின் வயிற்றிலிருந்த பொழுதே ஞானத்தைக் கொடையாகப் பெற்றிருந்த போதிலும்,அவர் தூய ஆவியினால் கருத்தரிக்கும் பொழுது, அவரது ஞானம் புதுப்பிக்கப்பட்டது. இரத்த தானம் செய்யும்பொழுது, புதிய இரத்தம் உற்பத்தியாகி உடலில் பாய்வது போல, தனது ஞானத்தைப் பிறருக்கு வாரி வழங்குவதன் வழியாக, தன்னிலே மீண்டும் மீண்டும் இறை ஞானத்தால் நிரப்பப்படுகிறார் அன்னை. இவ்வளவு ஞானமிருந்தும் அவர் தன்னிலே பெருமை பாராட்டவில்லை, தற்புகழ்ச்சி கொள்ளவில்லை (எரே 9:23) மாறாக, அவரது பெருமையை வானதூதர் பறைசாற்றினார் அவரது உயர்வினை எலிசபெத்து உலகுக்கு உரைத்தார்.

இன்னும் பல பக்தர்கள் அவரது புதுமைகளையும், புண்ணியங்களையும் புகழ்ந்தவண்ணமிருக்கின்றனர். இவையெல்லாம் மரியாவின் ஞானத்தின் வெளிப்பாடே.

**- தாயே எங்கள் தஞ்சமே!**

# கைமாறு

– T.பீட்டர் அந்தோணிராஜ், ஆசிரியர்

அந்த சர்க்கஸ் கூடாரத்தில் கூட்டம் அவ்வளவாக இல்லை. சர்க்கஸ் தொழிலாளர்களோ தமது உற்சாகத்தில் எவ்வித குறைவுமின்றி தங்கள் சாகசங்களை நிகழ்த்திக் காட்டிக்கொண்டிருந்தார்கள். சிலர் 50 அடி உயரத்திற்குமேல் கயிற்றில் தலைகீழாக ஆடிக்கொண்டிருந்தார்கள். சில சிறுமிகள் பந்துபோல இங்கும்அங்கும் பறந்துகொண்டிருந்தார்கள். காண்பதற்கே கண்கொள்ளாக் காட்சியாக இருப்பினும் மக்களின் ரசனை மாற்றத்தால் சர்க்கஸ் கூடாரங்களில் எதிர்பார்த்த கூட்டம் இருப்பதில்லை. சர்க்கஸ் தொழிலும் லாபகரமான தொழிலாகத் தோன்றவில்லை.

அந்த சர்க்கஸ் கூடாரத்தின் உரிமையாளர் திரு. தங்கபாண்டி என்பவர் சுமார் 60 வயது மதிக்கத்தக்கவர். அவரிடம் உரையாடியபோது, நான் தெரிந்து கொண்டதென்னவென்றால் இந்த சர்க்கஸை நம்பி சுமார் 20 குடும்பங்கள் தம் வாழ்வை ஓட்டுகின்றனர். சிறு குழந்தைகளுக்கு பயிற்சி அளித்து சாகசங்களில் ஈடுபட வைக்கிறார்கள். கரணம் தப்பினால் மரணம் என்ற நிலையில் ஒவ்வொரு நாளும் உயிரை பணயம் வைத்து நிகழ்ச்சிகளை நடத்துகிறார்கள். சிலர் இந்த சர்க்கஸ் கூட்டத்தை விட்டு விலகி வேறு தொழிலுக்கு சென்று விடுவதும் உண்டு.

திரு. தங்கபாண்டி கூறும்போது எத்தனைபேர் வந்தாலும் சென்றாலும் ராணி போல ஒரு தியாக உணர்வுள்ள பெண் எங்கள் சர்க்கஸுக்கு கிடைக்க மாட்டாள் என்று கூறினார். ராணியா? யார் அவள்? எங்கே இருக்கிறாள்? என என் எண்ணத்தில் ஆயிரம் கேள்விகள் உதித்தன. அவர் தொடர்ந்து சொன்னார்.

ராணி வேறு யாருமில்லை, இந்த சர்க்கஸ் சாகச சிறுமிகளுக்கு பயிற்சி அளிக்கும் பயிற்றுனர் தான் ராணி. திரு. தங்கபாண்டி என்னை சர்க்கஸ் தொழிலாளர்கள் தங்கியிருக்கும் கூடாரத்திற்கு அழைத்துச் சென்றார். பலர் ஆங்காங்கே அமர்ந்திருந்தனர். சிலர் தூங்கிக்கொண்டிருந்தனர். சுமார் 35 வயது மதிக்கத்தக்க பெண் ஒருத்தி நாற்காலியில் அமர்ந்திருந்த ஒரு பெரியவருக்கு கை கால்களில் ஏதோ ஒரு தைலம் தேய்த்துவிட்டுக்கொண்டிருந்தாள். அந்த பெரியவரை கூர்ந்து நோக்கியபோது தான் தெரிந்தது அவரது கழுத்து நேராக இல்லை என்பது. அவருக்கு என்ன நேர்ந்தது? ராணி எங்கே? போன்ற கேள்விகள் என் முகத்தில் நிழலாட திரு தங்கபாண்டி அதைப் புரிந்துகொண்டு பேசினார். (தொடரும்...)

# PALINDROME (பாலின்ட்ரோம்)

எந்த ஒரு வார்த்தையையும் இடப்புறம் இருந்து வலப்புறமாகவோ அல்லது வலப்புறம் இருந்து இடப்புறமாகவோ வாசிக்கும் போது ஒரே வார்த்தையாக அமைந்தால் அது பாலின்ட்ரோம் என அழைக்கப்படும்.

பாப்பா, மாமா விகடகவி போன்றவை இதில் அடங்கும் ஆங்கிலத்தில் எடுத்துக்கொண்டால் Madam, Malayalam போன்றவை இதில் அடங்கும். இதேபோல் ஆங்கிலத்தில் ஒரு வாக்கியம் உள்ளது. இதை இருபுறம் இருந்து வாசித்தாலும் ஒரே வாக்கியமாக இருக்கும். Murder for a jar of red rum. பரிசோதித்து பாருங்கள் உங்களுக்கு புரியும். சரித்திரத்தில் மாவீரன் நெப்போலியன் சிறையிலிருந்து சொல்லிய வாக்கியம் Able was I ere I saw Elba.

- Divya Kingsly, Pothakkalanvilai

# நல்லாசிரியர்
# டாக்டர். ராதா கிருஷ்ணன்



ஆசிரியராக இருந்து குடியரசு தலைவராக உயர்ந்தவர், தத்துவ மேதை எனப்புகழப்படுபவர், தம் பிறந்த நாளை ஆசிரியர் தினமாக கொண்டாட விரும்பியவர் என இத்தகைய பெருமைகளுக்கு உரியவர்தான் டாக்டர்.ராதா கிருஷ்ணன் என்ற மாமனிதர்.

"தோன்றின் புகழோடு தோன்றுக" என்ற வள்ளுவரின் வாக்கின்படி 1888–ம் ஆண்டு செப்டம்பர் 5–ம் நாள் பிறந்தார். இவரது தந்தையார் பெயர் வீராசாமி தாயார் பெயர் சீத்தம்மாள். தன்னுடைய தொடக்க கல்வியை திருப்பதி மற்றும் திருத்தணியில் கற்றார். உயர்கல்வியை வேலூர் மற்றும் சென்னையில் கற்றார்.

உயர்கல்வியை கற்று முடித்த பின்னர் சென்னை மாநில கல்லூரியில் பேராசிரியராக தனது ஆசிரிய பணியை தொடங்கி அதே கல்லூரியில் தத்துவ பேராசியர் ஆனார். அவரது புகழ் பல்கலைக் கழகங்கள் எங்கும் பரவியது.

ஆங்கிலத்தில் கடல் மடை வெள்ளம் போல் பேசுவதில் திறமை பெற்றவர். உலகத்தில் உள்ள அனைத்து பல்கலைக் கழகங்களும் இவருக்கு 11 டாக்டர் பட்டங்களை வழங்கி சிறப்பித்தது. நாட்டு விடுதலையிலும் அதிக நாட்டம் கொண்டு தேச விடுதலைக்கு போராடி 1962–ம் ஆண்டு இந்திய குடியரசு தலைவராக தேர்ந்து எடுக்கப்பட்டார். இதனால் உலகத் தலைவர்கள் அனைவரின் பாராட்டையும் பெற்றார். இந்திய குடியரசுத் தலைவராக பதவி வகித்தாலும் தாம் ஓர் ஆசிரியர் என்பதிலேயே பெருமை கொண்டார். அவரது விருப்பப்படியே ராதா கிருஷ்ணன் பிறந்த நாள் ஆசிரியர் தினமாக கொண்டாடப்படுகிறது!

**P. ஜோஸ்பின்,** பொற்பை

# ஆசிரியர்

சின்னஞ்சிறு சிட்டுக்களை சிரிக்க வைத்து சிந்திக்க வைத்து...
பட்டு போன்ற நெஞ்சினிலே மொட்டு போன்ற
அறிவினை மெதுவாக மலரச் செய்து...
ஒவ்வொன்றாய்க் கற்பித்து, ஒழுக்கத்தை உணரவைத்து...
எல்லையில்லாக் கல்வியினை, எழுத்துக் கூட்டி படிக்க வைத்து
கரையில்லா அன்புதனை, கற்கண்டாய் சுவைக்கவைத்து...
தீம்பாலாய் நட்புதனை, தெவிட்டாமல் உணரவைத்து...
மேன்மேலும் படிக்கச் செய்து, மேதாவியாக்கி விட்டு,
தன் நிலையில் மாறுபடாது இருப்பவர் தான் 'ஆசிரியர்'.

**டே. கீர்த்திகா,** வெள்ளக்கோவில்

# இளையோருக்கு வழிகாட்டும் திருவிவிலியம்

– வி. சாந்தாதேவி
தலைமை ஆசிரியை
புனித மரியன்னை துவக்கப்பள்ளி
பொற்பை



எல்லாக் குழந்தைகளும் மண்ணில் பிறக்கும்போது நல்லவர்கள் தான். அவர்கள் வாழ்ந்துவரும் சூழ்நிலைக்கேற்ப நல்லவராகவும், தீயவராகவும் மாறுகிறார்கள். இளையோர்களை நல்வழிவடத்த திருவிவிலியத்திலிருந்து இயேசு எவ்வாறு வாழ்ந்தார் என்பதையும் கூறி இளையோர்கள் பின்பற்ற வேண்டிய சில வழிமுறைகளை இங்கு காண்போம்.

கடவுள் தம்மையும் தம் மீட்புத்திட்டத்தையும் மனிதருக்கு சொல்லாலும் செயலாலும் வெளிப்படுத்தினார். இவ்வாறு அவர் வெளிப்படுத்திய உண்மைகளையும், நிகழ்ச்சிகளையும், வரலாற்றையும் கொண்ட நூல்களின் தொகுப்பே திருவிவிலியம் ஆகும். இது தூய ஆவியாரின் தூண்டுதலால் எழுதப்பட்டது. இஸ்ரவேல் மக்களுக்கும், அவர்கள் வழியாக உலகம் அனைத்திற்கும் கடவும் தம்மையும் தம் மீட்புத் திட்டத்தையும் வெளிப்படுத்தி கிறிஸ்துவின் வருகைக்காக மானிடரை தயார்செய்த வரலாற்றை பழைய ஏற்பாடு நமக்கு கூறுகிறது. கிறிஸ்துவின் வாழ்வு, மீட்புப்பணி, தொடக்கத் திருச்சபையின் வரலாறு, கிறிஸ்தவர்களின் வாழ்க்கை முறை ஆகியவற்றை புதிய ஏற்பாடு நமக்கு கூறுகிறது. இயேசு கடவுளும் மனிதருமாக இவ்வுலகில் வாழ்ந்துவந்தார். இறைத்தந்தையின் மைந்தனாவும் உலக மக்களுக்கெல்லாம் தலைசிறந்த வழிகாட்டியாகவும் திகழ்ந்தார். திருவிவிலியத்திலிருந்து இளையோருக்கு வழிகாட்டும் சிற நற்பண்புகள் :

1. செபம் 2. கீழ்ப்படிதல் 3. நம்பிக்கை 4. மன்னிப்பு 5.தாழ்ச்சி 6. அன்பு 7. பணிவு 8. ஏற்றத்தாழ்வின்மை 9. தியாகம்.

**செபம் :**

செபிக்கத் தெரியாதவன் வாழத்தெரியாதவன் – புனித குழந்தை தெரசா

செபம் இல்லாத வாழ்வு கூரையில்லா வீட்டிற்கு சமம் என்பார்கள். செபம் கிறிஸ்தவ வாழ்வுக்கு மிகவும் அவசியம். எப்போதும் விழிப்பாயிருந்து மன்றாடுங்கள். –லூக் 21:36 என்று அழைப்புவிட்ட இயேசு நம்மையும் செபிக்க அழைக்கிறார். மத்.7:7ல் கேளுங்கள் உங்களுக்கு கொடுக்கப்படும்; தட்டுங்கள் திறக்கப்படும்; தேடுங்கள் நீங்கள் கண்டடைவீர்கள் என்று கூறுகிறார்.

நாம் தாய் தந்தையிடமோ, நண்பரிடமோ பேசுவதைப் போன்று உள்ளத்தைத் திறந்து கடவுளிடம் உரையாடுவதே செபம். இளையோராகிய நாமும்

செபிக்க வேண்டும். இயேசு தம் வாழ்வில் ஒவ்வொரு முக்கிய முடிவுகள் எடுக்கும் முன் செபித்தார். உன்னைப் படைத்தவரை உன் இளமைப் பருவத்தில் மறவாதே (சபைஉரையாளர் 12:1) என்று விவிலியம் சொல்கிறது. இந்த இளமைப் பருவத்தில் நான் நடக்க வேண்டிய அந்த வழியை எனக்கு காட்டியருளும்(தி.பா.143:8)

**கீழ்ப்படிதல் :**

இளையோர்கள் தம் நடத்தையை மாசற்றதாய்க் காத்துக்கொள்வது எவ்வாறு? உம் வாக்கை மாசற்றதாய்க் காத்துக் கொள்வது எவ்வாறு? உம் வாக்கை கடைப்பிடித்தால் அன்றோ? (தி.பா.119:9) இளையோர்கள் இறைவனின் வார்த்தை மதிப்பீடுகளுக்கு கீழ்ப்படிந்து அப்பண்புகளை தம் வாழ்வாக்க வேண்டும்.

இயேசு தம் பெற்றோருக்கு கீழ்ப்படிந்தார். லூக்.2 இளையோர்களும் தம் பெற்றோருக்கு கீழ்ப்படிந்து நடக்க வேண்டும். தந்தை சொல் கேளாத மகன் தன் வாழ்வில் எவ்வளவு இன்னல்களைச் சந்தித்தான் என்பதை லூக்.15:11ல் காணாமல் போன மகன் உவமை வாயிலாக சுட்டிக்காட்டியுள்ளார்.

**நம்பிக்கை :**

உன் வழியை ஆண்டவரிடம் ஒப்படைத்துவிடு அவரையே நம்பியிரு. அவரே உன் சார்பில் செயலாற்றுவார். தி.பா.37:5 வேலையில்லாமல் இன்று எத்தனையோ இளைஞர்கள் விரக்தியில் இருக்கிறார்கள். அவர்களுக்கு (நீ.மொழி 14:23) கடும் உழைப்பு எப்போதும் பயன்தரும் என ஆற்றுப்படுத்துகிறது. இயேசு சீடர்களை நோக்கி மாற்கு4:40ல் ஏன் அஞ்சுகிறீர்கள் உங்களுக்கு இன்னும் நம்பிக்கை இல்லையா என திடப்படுத்துகிறார்.

இளையோர்கள் நோய், தனிமை போன்ற சூழ்நிலைகளில் (தி.பா.107: 20) ன் வாயிலாக தம் வார்த்தையை அவர் அனுப்பி அவர்களைக் குணப் படுத்தினார். அழிவினின்று அவர்களை விடுவித்தார். எனவே தம்வாழ்வில் இளையோர்கள் இறைநம்பிக்கையோடு வாழவேண்டும்.

**மன்னிப்பு :**

தவறு செய்வது மனித பலவீனம். மன்னிப்பதும் மறப்பதும் இறைத் தன்மையாகும். லூக்கா.6:27-29ல் மன்னிப்பைக் கற்றுக்கொடுத்தார். ஒரு கன்னத்தில் அறைந்தால் மறுகன்னத்தையும் திருப்பிக்கொடுத்தார் இறைமகன் இயேசு. மாற்கு 16:15ல் திருமுழுக்குப் பெற்ற ஒவ்வொருவரும் நற்செய்தியை அறிவிக்கவேண்டும். அறிவிக்கத்தவறியதற்கு மன்னிப்பு கேட்க வேண்டும். பிறர் நம்மைத் துன்புறுத்தும்போது இளையோராகிய நாம் வன்முறைகளைக் கையாளாமல் திருச்சபையின் தூண்களாகத் திகழவேண்டும் என்பதை - உரோ 12:19 பழிவாங்காதீர்கள்; அதைக் கடவுளின் சினத்திற்கு விட்டுவிடுங்கள், என்றும் 1கொரி. 10:13ல் சோதனை வரும்போது அதைத் தாங்கும் வலிமையை அருள்வார். மன்னித்தல் ஓர் உயர்ந்த பண்பு என்ற சொல்லுக்கு இலக்கணமாக வாழ்ந்த இயேசுவைப் போல் இளையோர்களும் தம் மன்னித்தல் பண்பை வாழ்வாக்க வேண்டும். - **தொடரும்....**



# பிறந்த நாள் வாழ்த்து

செப்டம்பர்

4

2013





## A. டினோஷா அட்லின்

பல்லாண்டு வாழ்க என வாழ்த்தும்
அன்பு உள்ளங்கள்...

பெற்றோர்

**M.அந்தோனி சசி – A.சகாய ஜெர்லின் பாலா**

தாத்தா–பாட்டி

**மரிய உபகாரம் – சூசை அந்தோணி**

மற்றும் உற்றார் உறவினர்கள், பொற்பை

## திருச்சிலுவை மகிமை!



திருச்சிலுவையை புகழ்ந்து பாடுவோமே!
அதன் மகிமையை உணர்ந்து வாழ்வோமே!
திருச்சிலுவை மகிமைப் பெருநாள் தானோ!
தீய சக்திகள் அழியும் திருநாள் தானோ!
ஆசீர்வாதத்தின் அடையாளம் திருச்சிலுவை!
ஆயன் இயேசுவின் தூய சிலுவை!
காக்கும் அடையாளம் திருச்சிலுவை!
காருண்ய தேவனின் தூய சிலுவை!
மீட்பின் சின்னம் திருச்சிலுவை!
மீட்பர் இயேசுவின் தூய சிலுவை!
பாவங்களை மன்னித்திடும் திருச்சிலுவை!
பரமன் இயேசுவின் தூய சிலுவை!
சாத்தானை வென்றிடும் திருச்சிலுவை!
சத்திய சீலரின் தூய சிலுவை!
சாபங்களை நீக்கிடும் திருச் சிலுவை!
சமாதான அரசரின் தூய சிலுவை!
ஆன்மாவைக் காத்திடும் திருச் சிலுவை!
அன்பின் அரசரின் தூய சிலுவை!

– **ம. மிக்கேல் உஷா**, பொற்பை

# கவிதைச் சோலை

## என் தாயின் கருவறையில்....



என் தாயின் கண்கள்
எனது பிணி நீக்கும்
முதல் மருந்து!
என் தாயின் குரல்
என்னை தலாட்டிய
முதல் இசை!
என்தாயின் முத்தம்
நான் சேமிக்க மறந்த
முதல் சொத்து!
என் தாயின் தோள்
நான் தூங்கிய
முதல் தொட்டில்
எனது தாயின் விரல்கள்
எனது கண்ணீரைத் துடைத்த
முதல் பூக்கள்
என் தாயின் மடி
என் சோகங்களின்
முதல் கல்லறை
சொல்லாமல் என்னை நெருங்கும்மரணம்கூட...
என் தாயைக் கண்டால் சொல்லிவிட்டு ஓடிவிடும்!
என்ன தவம் செய்தேன் உன் கருவாக
நான் அவதரிக்க........
நன்றி தாயே
கருவாக இருந்த என்னை
உருவாக உந்த உலகிற்கு
தந்தைமைக்கு...!

– **M.ரோஸ் பாத்திமா,** பொற்பை

## வெற்றி உன்வசம்

சித்திரை மாதம் சூரியன் வசம்
ஆடி மாதம் காற்றின் வசம்
மார்கழி மாதம் குளிரின் வசம்
தை மாதம் பசுமையின் வசம்
நண்பனே! வெற்றி உன்வசம்
அதற்கு முயற்சி வேண்டும்
தன்னம்பிக்கையே கவசம்
முயன்றால் வெற்றி என்றும்
உன்வசம்
நீ ஜெயித்தால் கரகோஷம்


– **டே. நிஜிதா**
வெள்ளக்கோவில்

## திருக்கல்யாணத் தாயே...!

திருமண வரம் அருளி
தினமும் உமை
தியானிக்கச் செய்து – நின்
திருவடி வணங்கி நிற்க
திங்கள் தோறும் வந்திடுவோம்
திருத்தல நாயகியாம் –உம்
திருமகனை உலகிற்கீந்து
திருத்தேரிலே வலம்வந்து
திருத்தலத்திலே
திருவருள்புரிவாய் அம்மா!

– **B. ஜோஸ்பின் மேரிதாசன்,**
கவரப்பேட்டை

## அறிந்தேன்



அமைதியை அறிந்தேன் ஆழ்கடலில்
இயற்கையைக் கண்டு வியந்தேன் இப்பூவுலகில்
செந்தமிழை அறிந்தேன் தென்னாட்டில்
நற்பண்பை அறிந்தேன் தோழமையில்
மகிழ்ச்சியை அறிந்தேன் துன்பத்தில்
வகுப்பறையில் அறிந்தேன் வளர் கல்வியை
ஆசிரியரிடம் அறிந்தேன் அறிவாற்றலை!

- D. அந்தோணி ஜெர்லின், பொற்பை.

## அற்புதத் தாயே

அங்கும் இங்கும் ஆசையில் அலைகின்ற அவனவன் உள்ளம்
பொங்குவதோ கோபம், இழப்பதோ பொறுமை, இருப்பதோ பொறாமை
எங்கும் அமைதிக்கு அடிப்படை தேவை நாவடக்கம்
தங்கும் இதய அமைதி தந்திடுவாய் எம் கல்யாணத் தாயே!

பொறுப்பில்லா பேச்சும் விடுப்பில்லா பகைதரும் பார்வையும்
வெறுப்பநிறை உள்ளத்து இறுமாப்பு நீக்கி, பாச உணர்வும்
பண பலமிருந்தால் பாசம் ஓடிவிடும் பந்தங்கள் நாடி வரும்
மன பலமிருந்தால் மார்க்கமும் தெரியும் தூக்கமும் வந்து விடும்

வீக்கம் உள்ளவனும் ஏக்கம் கொள்பவனும் தூங்குவதில்லை
துக்கம் விலகவில்லை அதனால் தூக்கம் வருவதில்லை – எமைக்
காக்கும் உன் விழிகள் கண் அயர்வதில்லை
ஏக்கம் நிறை நெஞ்சத்தோடு நிற்கின்றோம் உம் திருமுன் தாயே!

வாடிய உம் மக்கள்கூட்டம் தினம் உம் பதம் வந்தோம்
தேடியே வந்த எம் குறை தீர்த்துவைப்பாய் நீயே
கூடியே ஜெபித்து தினம் கறை நீங்கி வாழ உமையே
நாடியே வந்தோம் எம் திருக்கல்யாணத் தாயே!

எல்லோரும் இணைந்து இறை பணி செய்திட வேண்டுமம்மா
எல்லோரும் சமம் நம்மில் ஏற்றத்தாழ்வு மறைய பண்பாடு வேண்டுமம்மா
எல்லோரும் நல்லவங்க என நாங்கள் நினைத்திட வேண்டுமம்மா
எல்லோரும் கல்யாணத்தாய் பிள்ளைகள் என பார் போற்ற வேண்டுமம்மா...!

– **Y.V.R.ஜோஸ்,** சென்னை–106.

## அண்ணன்

அண்ணன்
நல்ல தோழன்
நல்ல பாதுகாவலன்
நற் கணவனுக்கு மச்சான்
நற் பிள்ளைக்கு தாய்மாமா
ஆனால் சிலருக்கு மட்டும்
வாய்க்கவில்லை ஏனோ?
கடைசிவரை
யார் அந்த அண்ணியார்!

– **திவ்யா கிங்ஸிலி**
பொற்பை.

## தாயின் கருவறை



தாயின் கருவறை
ஒரு அழகான கோவில்
தாயின் பாசத்தாலும்
சுவாசத்தாலும் பிறந்து
இவ்வுலகை அடைகிறாய்
தாயின் பாசத்திற்கு
ஈடாக இவ்வுலகில்
எதுவுமே இல்லை
இவ்வுலகமே அழியும்
நிலை ஏற்பட்டாலும்
தாயின் பாசம் மட்டும் அழியாது
இதுவே தாயின் கருவறை!

– **A. விஜிலா,** பொற்பை.

# திருச்சபை செய்திகள்

(தொகுப்பு: அருட்திரு. முனைவர் R. ஜோசப் ரவி பாலன்)

1. திருத்தந்தையின் ஆசியப் பயணம்

**திருத்தந்தை ஃபிரான்சிஸ் வருகிற ஜனவரி மாதத்தில் இலங்கைக்கும், ஃபிலிப்பைன்ஸ் நாட்டிற்கும் செல்லவிருக்கிறார் என்று திருத்தந்தையின் செய்தித் தொடர்பாளர் அருட்திரு. ஃபெடரிக்கோ லொம்பார்டி அறிவித்தார். ஜனவரி 12 முதல் 15 வரை இலங்கையிலும், அதைத் தொடர்ந்து அவர் ஃபிலிப்பைன்ஸ் சென்று அங்கே ஜனவரி 19 முடிய இருப்பார் என்றும் ஃபெடரிக்கோ லொம்பார்டி கூறினார்.**

2. மன்னிப்புக் கோரிய திருத்தந்தை

ஜூலை 28ஆம் நாள் தெற்கு இத்தாலியிலுள்ள காஸெர்த்தா என்கிற இடத்திற்கு திருத்தந்தை தன் நீண்ட நாள் நண்பராகிய ஜொவான்னி திரேத்தினோவைச் சந்திக்கச் சென்றிருந்தபோது, கத்தோலிக்கத் திருச்சபையின் சார்பில் பெந்தக்கோஸ்து சபையினரிடம் மன்னிப்புக் கோரினார். அச்சபையினரை சரியாகப் புரிந்துகொள்ளாமல் கத்தோலிக்கத் திருச்சபை அவர்களுக்குத் துன்பத்தைக் கொடுத்தது என்று ஒப்புக்கொண்டு மன்னிப்பு வேண்டினார். பெந்தக்கோஸ்து சபையின் போதகராய் விளங்கும் திரேத்தினோ திருத்தந்தை ஃபிரான்சிஸுக்கு அர்ஜென்டீனாவில் உள்ள புயனோஸ் ஐரெஸ் (Buenos Aires) என்கிற நகரத்தில் பணி செய்தக் காலத்திலிருந்தே தெரியும் என்று கூறப்படுகிறது. "உங்களைப் போன்ற மனிதர்களால் கிறிஸ்தவர்களாகிய எங்களுக்கு மிகுந்த நம்பிக்கை ஏற்படுகிறது," என்று திரேத்தினோ திருத்தந்தை ஃபிரான்சிஸிடம் கூறினார்.

3. ஏழாவது ஆசிய இளைஞர் தினம்

**ஆசிய ஆயர்கள் பேரவைகளின் கூட்டமைப்பின் தலைவரும் மும்பை உயர் மறை மாவட்டத்தின் பேராயருமாகிய கர்தினால் ஆஸ்வால்டு கிராசியாஸ் தென் கொரிய நாட்டில் நடைபெற்ற ஆறாவது ஆசிய இளைஞர் தினத்தின் நிறைவுரையை வழங்கிய போது, ஏழாவது ஆசிய இளைஞர் தினம் இந்தோனேசியாவில் 2017 ஆம் ஆண்டு நடைபெறும் என்று அறிவித்தார்.**

4. தென் கொரியாவில் திருத்தந்தை

**திருத்தந்தை ஃபிரான்சிஸ் ஐந்து நாள் பயணமாக ஆகஸ்டு 14 முதல் 18 வரை தென் கொரியாவுக்குச் சென்றார். அவரது பயணத்தின் நோக்கம் ஆறாவது ஆசிய இளைஞர் தினத்தில் கலந்துகொண்டு, மறைச்சாட்சிகளாய் மரித்த 124 கொரியர்களுக்கு முத்திப் பேறு பட்டம் வழங்குவதற்காகவே. தன் கொரியப் பயணத்தின்போது திருத்தந்தை ஆச்சரியம் தரும் பல செயல்களைச் செய்தார்.**

**தென் கொரியாவின் தலைநகரமாகிய சியோலில் இருந்து 90 மைல் தொலைவிலிருந்த டேஜெயோன் என்கிற இடத்திற்குச் செல்ல அவருக்கு ஹெலிகாப்டர் வசதி செய்து வைக்கப்பட்டிருந்தபோதிலும், அவர் அதிவேக இரயிலில் பயணம் செய்ய விரும்பி, அதைச் செயல்படுத்தினார். இந்த ஐம்பது நிமிடப் பயணத்திற்கு முன் திருத்தந்தை**

ஒருபோதும் அதிவேக இரயிலில் பயணம் செய்திருந்திருக்கவில்லை. அந்த இரயிலின் நான்காவது பெட்டியில் முதல் வகுப்பில் பயணம் செய்த அவர், சாதாரணப் பெட்டியில் இரண்டாம் வகுப்பில் பயணம் செய்த ஏறக்குறைய **500** பேரைச் சந்தித்து, அவர்களுடன் மிகுந்த உற்சாகத்துடன் பேசி மகிழ்ந்தார். அவருக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஹெலிகாப்டரில் அவரால் பயணம் செய்திருக்க முடியும். ஆனால் சாதாரண மக்களிடமும் அவர் பேசி மகிழ விரும்பியதனால் இந்த இரயில் பயணம்.

வத்திக்கானின் தென் கொரிய நாட்டுப் பிரதிநிதியின் இருப்பிடம் செல்லும் வழியில் திடீரென்று சியோல் நகரத்தில் **1960**ஆம் ஆண்டு இயேசு சபையினரால் தொடங்கப்பட்ட சோகாங் பல்கலைக் கழகத்திற்குச் சென்றார் திருத்தந்தை. தனக்கு திருமுழுக்கு தருமாறு கேட்ட ஒரு தென் கொரியருக்கு தனது தென் கொரியப் பிரதிநிதியின் இருப்பிடத்தில் உள்ள சிற்றாலயத்தில் திருமுழுக்கு வழங்கினார்.

மேலும் இந்தப் பயணத்தின்போது, திருச்சபைக்கு ஏராளமான காயங்கள் இருக்கின்றன என்றும் சில காயங்கள் குருக்களாலும், கத்தோலிக்கத்தைக் கடைப் பிடிப்பவர்களாலும் ஏற்பட்டுள்ளன என்றும் திருத்தந்தை கூறினார். குருத்துவத்தைச் சேர்ந்தவர்களின் செயல்பாடுகள் திருச்சபையில் சில பிரச்சினைகளை உருவாக்கியுள்ளன என்பதையும் அவர் சுட்டிக்காட்டத் தயங்கவில்லை. கடவுளின் அன்பினால் குணமாகாத காயங்களே இல்லை என்பதை வலியுறுத்திய நம் திருத்தந்தை, திருச்சபைக்கு ஏற்பட்டுள்ளக் காயங்களைக் குணமாக்க குருக்கள் அழைக்கப்படுகின்றனர் என்றும், எப்பொழுதும் கடவுள் மன்னிப்பையும் நம்பிக்கையையும் தருவார் என்கிற உறுதியுடன் செயல்பட வேண்டும் என்றும் கூறினார்.

கடந்த ஏப்ரல் மாதம் தென் கொரியாவின் கடலில் நிறைய மாணவர்கள் உட்பட **293** பேர் ஒரு படகு விபத்தில் கடல் நீரில் மூழ்கி இறந்தனர். இறந்தவர்களின் உறவினர்களைத் தேற்றும் விதத்தில் சியோல் நகர வீதிகளில் திருத்தந்தை மக்களைச் சந்தித்த வேளையில் தனது வாகனத்திலிருந்து இறங்கி, அவர்களோடு பேசி, ஆறுதல் கூறினார்.

5. புனித தொன் போஸ்கோவின் இருநூறாவது பிறந்த நாள்

புனித தொன் போஸ்கோவின் இருநூறாவது பிறந்த நாளை முன்னிட்டு, சலேசியச் சபையினர் ஏற்பாடு செய்துள்ள ஓராண்டு கொண்டாட்டம் ஆகஸ்டு **1 6** ஆம் நாள் தொடங்கியது. சலேசியச் சபையின் நிறுவனரின் இருநூறாவது பிறந்த நாள் **2015**ஆம் ஆண்டு, ஆகஸ்டு **16**ஆம் நாள் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட விருக்கிறது. இச்சிறப்பு நிகழ்வு சம்பந்தமான செய்தியை சலேசியச் சபையின் இப்போதையத் தலைவர் பேரருட் திரு. ஆஞ்சல் ஃபெர்னான்டஸ் ஆர்ற்றிமே வழங்கினார். சலேசியச் சபையின் இன்றையத் தலைவர் புனித போஸ்கோவுக்குப்பின் வந்த தலைவர் களில் பத்தாமவர் என்பது குறிப்பிடத் தக்கது.





# எனது கிராமம்

– ம. ஜேசுதாசன்
(முன்னாள் தலைவர்,
தமிழ:நாடு மெர்க்கண்டைல் வங்கி)

பொத்தக்காலன்விளை தனிப்பங்காக அறிவித்த பிறகு தந்தை தனிஸ்லாஸ் பங்காரு அதன்பின் தந்தை மஸ்கரனாஸ் இவர்களுக்குப் பிறகு மூன்றாவது பங்குக்குருவாக பொறுப்பேற்றது தந்தை **M.S.**அந்தோனி அடிகளார் 1948ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் குருப்பட்டம் பெற்று சில ஆண்டுகள் சாத்தான்குளத்தில் துணைப்பங்குக் குருவாக பணியாற்றியபின் முதன்முதலாக பொத்தக்காலன்விளையில் தனிப் பங்குக் குருவாக 1953-ம் ஆண்டு பொறுப்பேற்றார். தொடர்ந்து 12 ஆண்டுகள் ஒரே பங்கில் திறம்பட பணியாற்றி யாரும் சாதிக்காத ஒரு சாதனை படைத்தவர் **M.**சிலுவை அந்தோனி அடிகளார். அவரைப் பற்றி சுருக்கமாக சொல்லவேண்டுமானால் அவர் நம்மிடையே வாழ்ந்த ஒரு புனிதர் எனலாம். நாம் வணங்கும் புனிதர்கள் பலருடைய திருஉருவச் சிலைகளை நம் கோவில்களில் காண்கின்றோம். அவர்களை ரத்தமும் சதையுமாக நாம் பார்த்ததில்லை, பேசியதில்லை. ஆனால் இந்த பொத்தக்காலன்விளையில் நம்மோடு ஒருவராக வாழ்ந்து நம்மோடு பேசி மகிழ்ந்து உறவாடி நமக்கு எல்லாம் வழிகாட்டியாக ஒரு புனிதர் இருந்தார் என்று கூறினால் அது மிகையாகாது.

தந்தை சிலுவை அந்தோனி அடிகளாரின் 12 ஆண்டு கால சாதனைகளை முழுமையாக புரிந்து கொள்ள வேண்டுமானால் அவர் பொறுப்பேற்ற காலகட்டத்தில் பொத்தக்காலன்விளை கிராமம் எந்த நிலையில் இருந்தது என்பதை தெரிந்துகொள்வது மிக அவசியம். அவர் பொறுப்பேற்ற 1953ம் ஆண்டுவாக்கில் இன்று நாம் பார்க்கின்ற எந்த போக்குவரத்து வசதியோ, தொலைத்தொடர்பு சாதனங்களோ கிடையாது. சாத்தான்குளத்திற்கு தெற்கேயும், கிழக்கேயும் சாலைகள் கிடையாது. முதலூர் வரை கல் சாலையும் அதற்கு அப்பால் மண் சாலைகள் தான் இருந்தன. தூத்துக்குடியிலிருந்து முதலூர் வரை தினமும் ஒரே ஒரு பேருந்து மட்டும் உண்டு. துணைப் பங்குகளான நவமுதலூர், கொழுந்தட்டு மற்றும் வாலத்தூர் சிற்றூர்களுக்கு சாலைகள் கிடையாது. அங்கு பங்குக் குருவானவர் செல்ல வேண்டுமானால் மாடுகள் பூட்டிய வில் வண்டியில் செல்ல வேண்டும் அல்லது நடந்து செல்லவேண்டும். அந்த சிற்றூர்களில் தங்குவதற்கோ ஒரு அவசர தேவைக்கு ஒதுங்குவதற்கோ வசதிகள் கிடையாது. பெரும்பாலான மக்கள் பனைத் தொழிலை நம்பி இருந்ததால் வருடத்தில் 6 மாதங்கள் ஆண்களும், பெண்களும் சிறுவர், சிறுமியர் அனைவரும் முன் காலை முதல், பின் மாலை வரை பனங்காட்டில் இருந்துவிடுவார்கள். மூன்று மாதங்கள் பனங்காட்டுக்குள்ளேயே குடிசை அமைத்து இரவும் தங்கி விடுவார்கள். மிகப் பெரும்பாலான வீடுகள் பனை ஓலையால்

வேயப்பட்ட கூறை வீடுகள். அதே போன்று குருவானவர் தங்கியிருந்த வீடும், பனை ஓலையால் வேயப்பட்டது. மின்சாரம் கிடையாது. வீடுகளில் மண்ணெண்ணை விளக்குகள் தான் ஒளி தந்தன. கோவிலில் மட்டும் பெட்ரோமாக்ஸ் விளக்குகள் உபயோகத்தில் இருந்தன. பள்ளிக்கூடம் ஆரம்ப பாடசாலை மட்டும். 6ம் வகுப்பு படிக்க விரும்பினால் சாத்தான்குளத்தில் இருந்த நடுநிலை ஆர்.சி பள்ளிக்கு நடந்து செல்லவேண்டும். இந்த சூழ்நிலையில் பொறுப்பேற்கும் பங்குக் குருவானவர் ஆன்மீகப் பணியோடு உலகப் பணியையும் ஆற்ற வேண்டிய கட்டாயத்தில் இருந்தார். குறிப்பாக சிறுவர், சிறுமியர், பெற்றோர்களோடு பனங்காட்டுக்கு செல்வதை தடுத்து பள்ளிக்கூடத்திற்கு திருப்பிவிடுவது முதல், ஆரம்பப்பள்ளி–நடுநிலைப்பள்ளி படிப்பு முடிந்ததும் உயர்நிலைப்பள்ளி மற்றும் கல்லூரி என மேற்படிப்பு படிக்க வழிகாட்டுவது வரை சகல உலகப் பணிகளையும் ஆற்றினார்கள் தந்தை அவர்கள். அவற்றின் பலன் பல இளைஞர்கள் இளம்பெண்கள் முதன்முதலாக தூத்துக்குடியிலும், பாளையங்கோட்டையிலும் கல்லூரிகளின் வாசலைத் தொட்டார்கள். அந்தக் கால கட்டத்தில்தான் பலர் ஆசிரியர்களாகவும், விரிவுரையாளர்களாகவும அரசு ஊழியர்களாகவும், டாக்டராகவும் உருவெடுத்து ஊருக்குப் பெருமை சேர்த்தார்கள்.

தந்தை சிலுவை அந்தோனி அடிகளாரைப் பற்றி எழுதும்போது அக்காலத்தில் ஊரில் நடைபெற்ற ஒரு முக்கிய நிகழ்வைப் பற்றி எழுதாமல் இருக்க முடியாது. தந்தை மஸ்கரனாஸ் காலத்தில் சில விரும்பத்தகாத சம்பவங்கள் நடந்து ஊரே இரண்டுபட்டு கிடந்தது. முக்கந்தர் கோஷ்டி, உபதேசியார் கோஷ்டி என ஊரே இருபிரிவுகளாக பிரிந்து ஒற்றுமை இழந்து எந்த நேரம் என்ன நடக்குமோ என்ற பதட்டமான சூழ்நிலை நிலவியது. தந்தை சிலுவை அந்தோனி அடிகளார் பொறுப்பேற்றதும் பிரிந்து நிற்கும் ஊரை ஒன்றாக்குவதையே தன் முதல் கடமையாக கருதினார். தன்னுடைய பேச்சாலும், அணுகுமுறையாலும் எல்லோரிடமும் வேறுபாடு இல்லாமல் பிரியமாக பழகும் பாங்காலும் எல்லா மக்களையும் தன்பால் ஈர்த்தார். அதன் விளைவாக பகை விலகி ஊர் ஒன்றானது. இதை எழுதும்போது தூத்துக்குடி மறைமாவட்டத்தில் பல பங்கு ஊர்களில் இந்த வித ஊர் சண்டைகளால் ஒற்றுமை இழந்து ஒருசாரர் வேறு மதங்களுக்கு மாறிய சம்பவங்கள் நினைவுக்கு வருகிறது. ஆனால் பொத்தக்காலன்விளை கிராமத்தில் தந்தை சிவவை அந்தோனி அடிகளாரின் அணுகுமுறையால் அத்தகைய அசம்பாவிதங்கள் நடக்கவில்லை என்று நினைக்கும்போது பெருமையாகவும் இருக்கிறது. தந்தையை நன்றியுடன் நினைக்கத் தோன்றுகிறது.

பொத்தக்காலன்விளையில் வான்நோக்கி எழும்பியுள்ள அன்னையின் புதிய ஆலயத்தை கட்டி முடிப்பதில் பெரும் பங்கு வகித்தவர் தந்தை சிலுவை அந்தோனி அடிகளார். அவர்கள் பொறுப்பேற்றபோது ஆலயபணி அஸ்திவாரத்தோடு நின்றிருந்தது.



தந்தை சிலுவை
அந்தோனி அடிகளார்.

மேற்கொண்டு பணி நடக்கவேண்டுமானால் அதிக நிதி தேவைப்பட்டது. அதை உள்ளூரிலேயே திரடடுவது முடியாத நிலை. தந்தை அவர்கள் ஒரு திட்டம் தீட்டினார்கள். அந்த காலகட்டத்தில் ஊரிலுள்ள பல இளைஞர்கள் பனைத்தொழிலை தவிர்க்க வேண்டும் அதே நேரத்தில் வெளிநாடு சென்று பெரும் செல்வம் சேர்க்கவேண்டும் என்ற நோக்கத்தோடு இலங்கை சென்று கொழும்பு நகரிலும் மற்ற இடங்களிலும் பலவிதமான தொழில்கள் துவக்கி நல்ல வசதியோடும், செல்வத்தோடும் வாழ்ந்து வந்தார்கள்

அவர்களை அணுகி நிதி திரட்டுவதற்காக கொழும்பு சென்றார்கள். அங்கு தந்தை அவர்களுக்கு கிடைத்த வரவேற்பு வார்த்தைகளால் விவரிக்க முடியாது. அவர்கள் முயற்சி வெற்றி பெற்றது. அந்தக்கால மதிப்பில் பெரும் தொகை என மதிக்கப்பட்ட ரூ.5000 வசூலானது. அந்த தொகையை மறைமாவட்டம் வழியாக முறையாக இந்தியாவுக்கு கொண்டு வந்து ஆலய பணியை மீண்டும் ஆரம்பித்தார்கள். அதற்கு ஏற்றார்போல் அந்நாளில் கொழும்பில் பெரும் வணிகராக விளங்கிய திரு. ஞானப்பிரகாசம் நாடார் அவர்கள் ஆலய கதவுகள், ஜன்னல்களுக்குத் தேவைப்படும் நிலைக் கற்களை நன்கொடையாக கொடுக்க முன்வந்தார்கள். விளைவு ஆலய பணி மீண்டும் வீறு பெற்று சுவர்கள் எழுப்பப்பட்டன. சுவர்கள் வளர்ந்து கூரை நிலையை அடைந்தது. அப்போது வெடித்தது ஒரு பெரிய பிரச்சனை. அது என்ன பிரச்சனை, அதைப் பின்னால் வந்த குருவானவர் எவ்வாறு சமாளித்தார் என்பதை பின்னால் எழுதுகிறேன்.

தந்தை சிலுவை அந்தோனி அடிகளாரின் ஆன்மீகப் பணியின் சிகரமாக விளங்கியது ஊரில் நற்கருணை பக்தியையும் மாதா பக்தியையும் பரப்பி மக்களின் ஆன்மீக தாகத்திற்கு உறுதியான அடித்தளத்தை அமைத்தது எனலாம். தனது பேச்சின் மூலமாகவும், நற்கருணை வீரர் சபையின் மூலமாகவும் திருப்பலியில் நற்கருணை அருந்தும் பழக்கத்தை உருவாக்கினார். மாதா பக்தியை பரப்பும் வகையில் வீடுகளில் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து ஜெபிக்கும் குடும்ப ஜெபமாலை பக்தியை பரப்பினார். அதற்கு அந்நாட்களில் மிகவும் பிரபலமாக விளங்கிய தேன்கூடு மாணவர் இளைஞர் இயக்கத்தை பயன் படுத்தினார். இந்த இயக்கத்தின் உறுப்பினர்கள் ஒருநாள் ஒரு வீடு என்ற கணக்கில் கிராமத்தில் உள்ள எல்லா வீடுகளுக்கும் சென்று குடும்ப உறுப்பினர்களோடு சேர்ந்து குடும்ப ஜெபமாலை சொல்லி இந்த பழக்கத்தை கிராமத்தில் ஆழமாக பதியச் செய்தார்கள். இன்று இந்த கிராமத்தைச் சேர்ந்த பலர் தொழில் வியாபாரம் மற்றும் உத்தியோகம் காரணமாக வெளியூர்களுக்குச் சென்று அங்கே புதிய ஆலயம் கட்டுவது, புதிய பங்குகள் நிறுவ உதவுவது போன்ற ஆன்மீக காரியங்களில் முன் நிற்கிறார்கள். அதற்கு அடிப்படை காரணம் தந்தை சிலுவை அந்தோனி அடிகளார் காலத்தில் போடப்பட்ட மேற்சொன்ன அடித்தளம் தான்.

தந்தை அவர்கள் தொடர்ந்து 12 ஆண்டுகள் இறைபணி ஆற்றி மறக்கமுடியாத ஒரு முத்திரையை பதித்துவிட்டு 1965ம் ஆண்டு பணிமாற்றம் செய்யப்பட்டார்கள். அழகப்பபுரம், வடக்கன்குளம், இடிந்தகரை போன்ற பெரிய ஊர்களில் பெரிய குருவாக பணியாற்றிவிட்டு ஓய்வுற்றிருந்த காலத்தில் 2010-ம் ஆண்டு மே மாதம் தன்னுடைய 89வது வயதில் இறைவனடி சேர்ந்தார்கள். பொத்தக்காலன்விளை கிராமமும், கிராம மக்களும் தங்களுடைய குடும்பத்தில் ஒருவர் இறந்ததாகவே கருதி கண்ணீர் சிந்தினர். அந்த புனிதரின் இறுதி யாத்திரையில் இந்த கிராம மக்கள் திரளாக சென்று தங்களுடைய நன்றிக் கடனையும், வணக்கத்தையும் செலுத்தியது மறக்க முடியாதது.



**– இன்னும் வரும்...**

## கடந்த மாத கேள்வி-பதில் போட்டி விடைகள்

1. நோவாவுக்கு
2. வன்முறை
3. கோபர் மரம்
4. கீல்
5. 8பேர்
6. ஆண்டவர்
7. நூற்றைம்து நாள்
8. ஒலிவ மர இலை
9. தீமையை
10. இரத்தத்தில்
11. வானவில்
12. காம்
13. பயிரிடும் தொழில்
14. நிம்ரோது
15. சேம்
16. பாபேல்
17. ஆபிராம்
18. மெல்கிசேதேக்கு
19. அரசர் பள்ளத்தாக்கு
20. நம்பிக்கை – நீதி.

## கடந்த மாத கேள்வி-பதில் போட்டியில் வெற்றி பெற்றவர்கள்

| | |
|---|---|
| D.ஜோஸ்பின் மேரி தாசன் | கவரப்பேட்டை |
| W. பெமிலா வில்சன் | கவரப்பேட்டை |
| M. அனிதா ஜான்சன் | கவரப்பேட்டை |
| S.பெனிட்டா டோமினிக் | கவரப்பேட்டை |
| S.கீதா சுரேஷ் | கவரப்பேட்டை |
| A. அன்ன புஷ்பம் ராஜன் | கவரப்பேட்டை |
| T. சுகிர்தமணி அன்பரசன் | கவரப்பேட்டை |
| A. ஜோஸ்பின் அபிஷியா | கவரப்பேட்டை |
| A.அனுஅகஸ்டின் | கவரப்பேட்டை |
| A. ஜோசப் அரிஸ்டாட்டில் | கவரப்பேட்டை |
| S. தினேஸ் எல்சி | கவரப்பேட்டை |
| D.இமகுலேட்சியோனா | கவரப்பேட்டை |
| D.ஆண்டனி அருண்ஜோசப் | கவரப்பேட்டை |
| P. ஸ்டெல்லா பீட்டர் | மாதர்பாக்கம் |
| லூர்து மேரி தேவசகாயம் | பிரகாசபுரம் |
| S.மலர் செல்வக் குமார் | தி.க. குன்றம் |
| A. தெரஸ்லின் ராஜன் | பொற்பை |
| A.ஜான்ஸி சேகர் | பொற்பை |
| S. ஜெயந்தி தங்கம் | பொற்பை |
| பிரின்ஸஸ் ஜேம்ஸ் | பொற்பை |
| G. ரெஜினாள் மேரி | பொற்பை |
| A. மேரி ஙலினி | பொற்பை |
| R. வெனிஷ்டா ராஜேஷ் | ஏரல் |
| S.மேரி லீலா | பொற்பை |
| A. லில்லி தெரஸ் | அந்தியூர் |
| A. சகாய லீன் நர்மதா | தோப்புவிளை |
| கபிரியேஸ் மேரி | பொற்பை |
| குயின் ரோஸ் பாக்கியம் | பொற்பை |
| P.சந்தன திரவியம் | பொற்பை |
| M.டேவிட் தேவராஜன் | வெ.கோவில் |
| J.டாம்சாந்த் | பொற்பை |
| S.ஜோஸ்லின் | பொற்பை |
| J.சுதா ராஜா | திருவான்மியூர் |
| F.தேவசகாயம் | தி.க.குன்றம் |
| A.ஜெயகரோலின் | கொழுந்தட்டு |
| M.ஆகாஷ் துரை | வெ.கோவில் |
| M.ஜெப ஆா | வெ.கோவில் |
| M.ஜெபரோஸ் அந்தோனி | வாடியூர் |
| A.பொன்சா அந்தோணி | வாடியூர் |
| S.நிர்மலா சந்தியாகுராஜன் | மார்க்கம்பட்டி |
| யூஜின் | வீ.பா.பட்டணம் |
| D.அந்தோனி ஏசுதாசன் | பொற்பை |

# உங்களுக்காக நாங்கள் ஜெபிக்கிறோம்

**தொடர்பு கொள்ளுங்கள் - 04639-261230 , 261330**

**02-08-2014 முதல் சனி அன்னையிடம் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள்**



| | | |
|---|---|---|
| திருமணவரம்கிடைக்க | - | 1473 பேர் |
| குழந்தைபாக்கியம் | - | 1042 பேர் |
| சுகப்பிரசவம் | - | 972 பேர் |
| நற்சுகம்பெற | - | 1563 பேர் |
| ஆன்மீகநலன்களுக்காக | - | 794 பேர் |
| தேவஅழைத்தல் | - | 632 பேர் |
| வேலைகிடைக்க | - | 1640 பேர் |
| தொழில்முன்னேற்றம் | - | 1242 பேர் |
| குடும்பசமாதானம் | - | 1478 பேர் |
| குடும்பநலன் | - | 1019 பேர் |
| உறவினர்நன்மைக்காக | - | 843 பேர் |
| தேர்வில்வெற்றிபெற | - | 767 பேர் |
| அலகைதொல்லைதீர | - | 949 பேர் |
| மனஅமைதிக்காக | - | 1182 பேர் |
| அறுவைசிகிச்சைவெற்றிபெற | - | 749 பேர் |
| மனமாற்றமடைய | - | 897 பேர் |
| குடிப்பழக்கத்திலிருந்துவிடுபட | - | 1276 பேர் |
| நல்லஇல்லம்அமைய | - | 783 பேர் |
| சோதனைகளைவெல்ல | - | 643 பேர் |
| கடன்தொல்லைதீர | - | 1372 பேர் |
| வழக்கில்வெற்றிபெற | - | 761 பேர் |

**அருள்தரும் இமயமே! திருக்கல்யாணத் தாயே! உம்பிள்ளைகளுக்காக வேண்டிக்கொள்ளும். - பங்குத்தந்தை**

**உங்கள் ஜெபஉதவிக்கு எங்கள் இணையதள முகவரி**

**kalyanamatha@gmail.com**


# பறவைகள் எத்தனை?

அரச மரத்திலும் ஆல மரத்திலும் இருந்த பறவைகள் எத்தனை?

அரச மரத்தில் இருந்த பறவைகள் ஆலமரத்தில் உள்ள சில பறவைகளைப் பார்த்துக்கேட்டன, நீங்கள் எத்தனை பேர்?அதற்கு ஆலமரத்துப் பறவைகள் அரச மரத்துப் பறவைகளை எண்ணிப்பார்த்துவிட்டு நாங்களும் நீங்களும் சம எண்ணிக்கையில் இருக்கின்றோம். உங்களையும் எங்களையும் கூட்டினால் வரும் கூட்டுத் தொகையில் வரும் இலக்கங்களும், உங்களையும் எங்களையும் பெருக்கினால் வரும் தொகையில் வரும் இலக்கங்களும் அப்படியே தலைகீழாக இருக்கிறது என்றன. அப்படியானால் அரச மரத்திலும் ஆல மரத்திலும் இருந்த பறவைகள் எத்தனை? – P. எஸ்தர் கிப்டா, பொற்பை

விடை : 9 பறவைகள்

# கண்ணீர் அஞ்சலி





திரு. **M.மரிய உபகாரம்** திருமதி.. **M.சூசை அந்தோணி**

முன்னாள் ராணுவ வீரர்

**படைப்பின் மாட்சியில் பங்கு கொண்ட நன்னாள்**

**06.11.1938** **12.11.1939**

**இறைவன் இல்லம் சென்ற பொன்னாள்**

**25.02.1992** **01.09.2001**

**அன்பு தந்தையே !**

**அன்று இந்திய தாய்க்கு உன்னை அர்ப்பணித்து**
**இமயம் முதல் குமரிவரை**
**பூமித்தாயின் மானம் காத்திட்ட –உங்கள்**
**திருவடிகளுக்கு வந்தனங்கள் பலகோடி**

**அம்மா !**

**அன்று உன் மகளின் உடல் நலத்திற்காக**
**பாலோடு தேனையும் கலந்து ஊட்டிய**
**உன் அன்புக்கு ஈடேது, எல்லையேது!**

**அன்பு தெய்வங்களே ! இன்று**

**உங்கள் குல மகளை திருச்சிலுவை நாதர் பாதமும்**
**சிலுவையடியில் தாயான திருக்கல்யாணத் தாயின் பாதமும்**
**அர்ப்பணித்து இறைவனின் இல்லம் சென்ற நீங்கள்**
**உங்கள் குல மகளின் நல்வாழ்விற்காக – விண்ணக**
**இறைவனின் அருளை திருச்சிலுவை நாதர் மற்றும்**
**திருக்கல்யாணத் தாயின் வழியாக பெற மன்றாட வேண்டி**
**உங்கள் மலர்ப் பாதங்களில் கண்ணீர் துளிகளை**
**பன்னீர் துளிகளாக சமர்ப்பிக்கும் அன்பு மகள்**

அன்பு மகள் :

**S. மிக்கேல் உஷா**

பொற்பை

# ஐந்தாம் ஆண்டு
## நினைவு அஞ்சலி





திருமதி. **S.காணிக்கை ஜெபமாலை**

**பிறப்பு**
**07.10.1928**



**இறப்பு**
**17.09.2009**

அன்பு அன்னையே....
உன்னை நினையாத நாளில்லை!
என்றும்
இறைவன் நிழலில் நீங்கள்!!
இன்றும்
உம் நினைவில் நாங்கள்!!!

**பிரிவால் வாடும் அன்பு நெஞ்சங்கள்**

மகள் : **S.லீமா ரோஸ் கத்திரின்**

பேரன் : **S.சந்தன இஃதுஸ் சேவியர் ராஜா**

பேத்தி : **S.தேவ சகாயராணி**

மற்றும் உற்றார் உறவினர்கள், நண்பர்கள்

பொத்தக்காலன்விளை

# வாழ்வு தரும் வார்த்தைகள் – ஆகஸ்ட் 2014

| தேதி | திருநாட்கள் | வாசகம் | நற்செய்தி |
|---|---|---|---|
| 1. | | 1கொரி. 2:1-5 | லூக். 4:16-30 |
| 2. | | 1 கொரி. 2:10-16 | லூக். 4:31-37 |
| 3. | புனித கிரகோரியார் | 1 கொரி. 3:1-9 | லூக். 4:38-44 |
| 4. | புனித ரோஸ் | 1 கொரி. 3:18-23 | லூக். 5:1-11 |
| 5. | | 1 கொரி. 4:1-5 | லூக். 5:33-39 |
| 6. | | 1 கொரி. 4:6-15 | லூக். 6:1-5 |
| 7. | ஆண்டின் ஞாயிறு 23 | எசே.33:7-9<br>உரோ. 13:8-10 | மத். 18:15-20 |
| 8. | மரியாவின் பிறப்பு | மீகா. 5:1-4 | மத். 1:1-16,18-23 |
| 9. | புனித பீட்டர் கிளவர் | 1 கொரி. 6:1-11 | லூக். 6:12-19 |
| 10. | புனித நிக்கோலஸ் | 1 கொரி. 7:25-31 | லூக். 6:20-26 |
| 11. | வண. லுயிஸ் | 1 கொரி. 9:1-,11-13 | லூக். 6:27-38 |
| 12. | மரியின் புனிதப் பெயர் | 1 கொரி. 9:16-19,22-27 | லூக். 6:39-42 |
| 13. | புனித ஜான் கிறிசோஸ்தம் | 1 கொரி. 10:14-22 | லூக். 6:43-49 |
| 14. | ஆண்டின் ஞாயிறு 24 | நாளா 21:4-9<br>பிலி. 2:6-11 | யோவா 3:13-17 |
| 15. | வியாகுல அன்னை | 1 கொரி. 11:17-26,33 | யோவா 19:25-27 |
| 16. | புனிதர்கள் கொர்னலியுஸ் சிப்ராள் | 1கொரி. 12:12-14,27-31 | லூக். 7:1-17 |
| 17. | புனித இராபர்ட் பெல்லர்மின் | 1 கொரி. 12:31,13:13 | லூக். 7:31-35 |
| 18. | | 1கொரி. 15:1-11 | லூக். 7:36-50 |
| 19. | புனித ஜானுவாரியுஸ் | 1 கொரி. 15:12-20 | லூக். 8:1-3 |
| 20. | | 1 கொரி. 15:35-37 | லூக். 8:4-15 |
| 21. | ஆண்டின் ஞாயிறு 25 | எசாயா 55:6-9<br>பிலி. 1:20-24,27 | மத். 20:1-15 |
| 22 | | நீ.மொ 3:27-34 | லூக். 8:16-18 |
| 23. | புனித பியோ | நீ.மொ. 21:1-6,10-13 | லூக். 8:19-21 |
| 24. | | நீ. மொ. 30:5-9 | லூக். 9:1-6 |
| 25. | | ச.உ 1:2-11 | லூக். 9:7-9 |
| 26. | புனிதர்கள்தமியான்,காஸ்பஸ் | சஉ 3:1-11 | லூக். 9:18-22 |
| 27. | புனித வின்சென்ட் தே பவுல் | சஉ 11:9-12:8 | லூக். 9:43-45 |
| 28. | ஆண்டின் ஞாயிறு 26 | எசே. 18:25-28<br>பிலி. 2:1-11 | மத். 21:28-32 |
| 29. | புனித மிக்கேல்அதிதூதர்கள் | தானி. 7:9-10,13-14 | யோவா 1:47-51 |
| 30. | புனித ஜெரோம் | யோபு 3:1-3,11-17,20-23 | லூக். 9:51-56 |




# திருவிவிலியம் நமது செல்வம்

## விவிலிய வினா – விடை போட்டி

**பதில்கள் தேடவேண்டிய பகுதி : தொடக்கநூல் அதிகாரம் 16 முதல் 27 வரை**

1. காட்டுக்கழுதை போல் வாழ்பவன் யார்?
2. ஆபிரகாமின் முதல் பெயர் என்ன?
3. ஆபிரகாம் கடவுளோடு செய்த உடன்படிக்கையின் அடையாளம் என்ன?
4. சோதோம் நகரின் நுழைவாயிலில் உட்கார்ந்து இருந்தவர் யார்?
5. ஈசாக்கு என்றால் என்ன பொருள்?
6. ஆகார் அலைந்து திரிந்த பாலைவனம் எது?
7. ரெபேக்காளின் தந்தை யார்?
8. ரெபேக்காளின் சகோதரன் யார்?
9. ஆபிரகாம் எத்தனை ஆண்டுகள் வாழ்ந்தார்?
10. யாக்கோபு என்னும் பெயரின் பொருள் என்ன?
11. பெத்தேல் நகரின் முதல் பெயர் என்ன?
12. யூதா என்ற பெயரின் பொருள் என்ன?
13. யாக்கோபு லாபானிடம் எத்தனை ஆண்டுகள் பணிபுரிந்தார்?
14. மகனயிம் என்றால் என்ன பொருள்?
15. யாக்கோபின் மகள் பெயர் என்ன?
16. வேற்று தெய்வங்களின் சிலைகள் எந்த மரத்தின் கீழ் புதைக்கப்பட்டன?
17. யாக்கோபின் கடைசி மகன் யார்?
18. ஈசாக்கு எத்தனை ஆண்டுகள் வாழ்ந்தார்?
19. கனவின் மன்னன் யார்?
20. யோசேப்பு விற்கப்பட்ட தலைவனின் பெயர் யாது?





**– P.ஆல்வின் அண்ணாமலை,**
தலைமை ஆசிரியர் (ஓய்வு).

### அடுத்த இதழ்

புனித ஜெபமாலை அன்னை சிறப்பிதழாக வெளிவர இருக்கிறது. உங்களுடைய வாழ்வில் அன்னை புரிந்த அற்புதங்கள் அதிசயங்கள் மேலும் அன்னையைப் பற்றிய கட்டுரைகள் கவிதைகள் வரவேற்கப்படுகின்றன. படைப்புகள் எங்களை வந்து...

**சேர வேண்டிய கடைசி நாள் : 15-09-2014**

சந்தாதாரராக ஆகுங்கள் ! அன்னையின் அருள் பெறுங்கள் !

**விடைகள் வந்து சேரவேண்டிய கடைசிநாள் : 15.09.2014**

# திருத்தல வழிபாடுகள்

- ஒவ்வொரு மாதமும் முதல் சனிக்கிழமை காலை 9.00 மணி முதல் 10.00 மணி வரை குணமளிக்கும் ஜெப வழிபாடு. 10.00 மணி முதல் 11.00 மணி வரை மலையாள மொழியில் திருப்பலி 11.00 மணி முதல் 12.00 மணி வரை ஜெபமாலை ஜெபித்துக்கொண்டு ஆலயத்தைச் சுற்றி திருக்கல்யாண அன்னையின் சப்பரப்பவனி. 12.00 மணிக்கு நவநாள் திருப்பலி நடைபெறும். தொடர்ந்து அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்படும். தேவைக்கேற்ப மாலை 4.00மணிக்கும், 6.30 மணிக்கும் திருப்பலி நடைபெறும்.
- முதல் சனி தவிர்த்து மற்ற சனிக்கிழமைகளில் மாலை 6.30 மணிக்கு எரியும் மெழுகுவர்த்தியை கரத்தில் ஏந்தி ஜெபமாலை ஜெபித்துக்கொண்டு தேரோட்ட வீதியில் திருக்கல்யாண அன்னையின் சிறிய சப்பரப் பவனி நடைபெறும். அதைத் தொடர்ந்து நவநாள் திருப்பலியும், நோயாளிகளை மந்திரிக்கும் சடங்கும் நடைபெறும்.
- மாதத்தில் முதல் செவ்வாய் அந்தோணியார் கெபியில் மாலையில் திருப்பலி நடைபெறும்.
- மாதத்தில் முதல் புதன் ஆலய வளாகத்தில் அமைந்துள்ள லூர்துமாதா கெபியில் மாலையில் திருப்பலி நடைபெறும்.
- மாதத்தில் இரண்டாவது புதன் காலை திருத்தலத்தில் திருப்பலி, மாலை நான்கு சந்தி கெபியில் திருப்பலி நடைபெறும்.
- மாதத்தில் முதல் வெள்ளி நோயாளிகளை வீட்டில் சந்தித்து நற்கருணை வழங்குதல்
- மற்ற நாட்களில் காலை 6.00 மணிக்கு திருப்பலி நடைபெறும்.

  மாதத்தின் முதல் வெள்ளி மற்றும் எல்லா ஞாயிற்றுக்கிழமைகளிலும் மாலையில் திவ்ய நற்கருணை ஆசீர்வாதம் நடைபெறும்.

**இணையூர் வழிபாடுகள்.**

**நவமுதலூர்**

- ஞாயிறுதோறும் ஊர் ஆலயத்தில் மாலை திருப்பலியும், வெள்ளி மாலை புனித மிக்கேல் அதிதூதர் கெபியில் திருப்பலியும் மற்றும் மக்களின் தேவைக்கேற்ப வார நாட்களில் திருப்பலியும் நடைபெறும்.

## திருக்கல்யாணத்தாய் திருத்தலப் பெருவிழா

| | | |
|---|---|---|
| ஜனவரி 14 – | மாலை 6.00 மணி | திருவிழா கொடியேற்றம் |
| ஜனவரி 21 – | மாலை 6.00 மணி | சிறப்பு நற்கருணை பவனி |
| ஜனவரி 22 – | மாலை 6.00 மணி | அன்னையின் அதிசயத் தேர்பவனி<br>சிறப்பு மாலை ஆராதனை |
| ஜனவரி 23 – | காலை 6.00 மணி | திருவிழா திருப்பலி |
| | மாலை 6.00 மணி | அன்னையின் அதிசய தேர்ப்பவனி<br>நற்கருணை ஆசீர் |